விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 10 சனிக்கிழமை (24.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 187

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# யாழில் இன்று பூரண ஹர்த்தால்

# திங்கள் முதல் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அழைப்பை தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் மற்றும் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன விடுத்துள்ளன.

இதேவேளை மாணவர்களின் க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்காக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரச உத்தியோகஸ்தர்களின் பணிப்புறக்கணிப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மீண்டும் தொடர்வதாக யாழ்.மாவட்ட தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவிற்கு இளம்பரிதி கடிதம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் சேதமாக்கப்பட்டு வருவது குறித்து யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ்.மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.


இன்றைய நாகரிக உலகில் சிறிலங்கா சிங்கள அரசு தமிழ்க்குழந்தைகளையும் சிறுவர்களையும் இன அழிப்பு நோக்கில் கொடூரமான முறையில் படுகொலை செய்து வருகிறது.

தமிழ் மக்களின் வணக்கத்திற்கும் மரியாதைக்குமுரிய யாழ்.மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள கட்டடங்களையும் சொத்துக்களையும் சேதப்படுத்தியும் எரியூட்டியும் மிலேச்சத்தனம் புரிந்துள்ளனர்.

எம் மக்களின் நெஞ்சங்களில் வாழும் அகிம்சைக்கு வரவிலக்கணம் கொடுத்த எங்கள் தியாகி திலீபன் நினைவுச்சின்னத்தையும் படையினர் தங்கள் இனவெறி பயங்கரவாதப் பற்களால் கடித்துக்குதறியுள்ளனர்.

படைகளின் இவ்வாறான இழிசெயல்களை தங்கள் கவனத்திற்கு சுட்டிக்காட்டுவதுடன் இச் செயற்பாடானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கான நியாயப்பாடுகளை இன்னும் வலுவாக்கும் என்பதுடன் சினங்கொண்டுள்ள மக்கள், படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம் என இளம்பரிதியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கொழும்பில் குண்டுச்சத்தம் மக்கள் மத்தியில் பரபரப்பு



(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சத்தத்தினால் அங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான வத்தளை உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் நேற்றுக் காலை பாரிய குண்டுவெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது.

இதனையடுத்து மக்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டது. வத்தளைப் பகுதியில் கடற்பரப்பில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் எனப்பலராலும் பேசப்பட்டது.

இதனையடுத்து உரிய தரப்பினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். அது குண்டு வெடிப்பினால் ஏற்பட்டதல்ல என தெரியவருகிறது.

விமானப்படையினர் அப் பகுதியில் நேற்று பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கிபீர் விமானம் ஒன்று திடீரென வேகம் எடுத்ததாலேயே இப்பாரிய சத்தம் எழுந்ததாக கூறப்படுகிறது.

கிபீர் விமானம் வேகம் எடுத்ததால் எழுந்த சுப்பர் சொனிக் பூம் சத்தமே அது என்றும் விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். தற்போது நிலவும் காலநிலையால் அதன் சத்தம் மிகப்பெரிதாக உணரப்பட்டுள்ளதாகவும் இந்த சத்தத்தினால் அயலில் இருந்த வீடுகளில் சிறிது (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-மன்னார் ஆயர்கள் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு



(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யாழ்ப்பாணம் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ,மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆகியோர் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினர்.

முற்பகல் 10 மணிக்கு தமிழீழ அரசியல் துறை நடுவப்பணியகத்தில் ஆரம்பித்த இச் சந்திப்பு இரு மணித்தியாலங்கள் இடம்பெற்றன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயற்பாடு தொடர்பில் அரசிடம் உறுதியான கொள்கையில்லை

### ஐ.தே.கவின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய சாடல்

(கொழும்பு)

சமாதான செயற்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் உறுதியான கொள்கை இல்லை. இதனால் தான் சமாதான முயற்சி சீர்குலைந்துள்ளது.

நாட்டு மக்களும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தெரிவித்தார்.

இத்தகைய நிலையினைக்கருதி நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படவேண்டும்.

பொறுப்பான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் அதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குவோம். இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரவேண்டும்.

அரசும் பேச்சுவார்த்தை விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். மீண்டும் நாடு யுத்த பாதைக்குச் செல்கிறதை சகலரும் அறிவர்.

நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.எனவே அரசு உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றார். (கு)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் ... விதழ்

# வரலாற்றின் வழிகாட்டுதலில் "கிளைமோர் முறியடிப்பு"

கிழக்கு மாகாணத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கிளைமோர்த் தாக்குதல்கள் என இப்போது தினசரி செய்திகள் வெளிவருகின்றன. அரசின் ஆழ ஊடுருவும் படைப்பிரிவினரே இவ்வாறு விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்று இந்த தாக்குதல்களை நடத்துகின்றார்கள். இதற்கு துணை இராணுவக் குழுக்களின் உதவியும் தாராளமாகக் கிடைக்கின்றது. இருந்த போதிலும் அண்மையில் ஆழ ஊடுருவும்படையணிகளைச் சேர்ந்த பலர் விடுதலைப்புலிகள் விரித்த வலையில் அகப்பட்டுள்ளார்கள் இதில் படையினர் சிலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்த முறியடிப்பானது பல உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆழ ஊடுருவும் படையை பயன்படுத்தி எதிர்த்தரப்பினரது பகுதியில் தாக்குதலை நடத்துவது என்பது அமெரிக்காவின் தோற்றுப்போன ஒரு உத்தியாகும்.

வியட்நாம் போராளிகள் இறுதிக்கட்டமாக பிரான்ஸ் சமரசப் பேச்சுக்கள் இழுபறிப்பட்டு அமெரிக்கப் படைகளை விரட்டியடிக்க தயாரானபோது அதனை சிதைக்க ஆழ ஊடுருவும் படை யணியை போராளிகளின் பகுதிக்குள் தரைவழியிலும் இரகசியமாக உலங்குவானூர்திகளின் மூலமாகவும் கொண்டு சென்று ஊடுருவ விட்டு தாக்குதல்களை மேற் கொண்ட போதும் கடைசியில் அமெரிக்கப் படைகள் அவலப்பட்டே தப்பியோடின.

அமெரிக்கப்படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்நாமில் வியட்கொங் போராளிகள் போராட்டம் நடத்தினர். போராளிகளின் கெரில்லா உத்திகள் அமெரிக்கப் படைகளை ஆட்டுவித்தன. 1960ஆம் ஆண்டு காலப்பகுதிகளின் கடைசியில் பேச்சு வார்த்தை மூலம் போராட்டத்தை சிதைக்க நகர்வுகள் மேற்கொள்ளப் பட்டன. பிரான்ஸ் தலைநகரில் பேச்சுக்கள் நடந்தன. பேச்சுக்கள் இழுபறிப் பட்டன.

பேச்சு–மோதல், பேச்சு–மோதல் என்று நாட்கள் நகர்ந்தன இந்த நிலையில் பேச்சுக்களில்நம்பிக்கை இழந்த போராளிகள் போருக்குத் தயாராகினர். அமெ ரிக்கப்படைகளுக்கு எதிராக டெட் வலிந்த தாக்குதல் என்ற நடவடிக்கையை போராளிகள் தொடங்கினர். 1968 ஆம் ஆண்டில் தொடங்கிய டெட் நட வடிக்கைகட்டம்கட்டமாகநகர்த்தப்பட்டது.

இதற்கிடையில் 1964ஆம் ஆண்டில் காட்டுப்போர் முறையாக ஆழ ஊடுருவும் படையணி அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. 6 பேர் கொண்ட பட்டாலியன் 12பேர் கொண்ட பிரிக்கேட் என்று பெரும்படையணிகளுக்கு இணையான 6பேர் 12பேர் கொண்ட இராணுவத்தினர் என்று அவை உருவாக்கப்பட்டன.

டெட் நடவடிக்கை காலத்தில் தான் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஆனாலும் கட்டம் கட்டமாக டெட் தொடர்ந்து டெட் நடவடிக்கையில் இறுதிக் கட்டமாக அமெரிக்கப் படைகளை விரட்ட தயார்படுத்தல்களை போராளிகள் மேற்கொண்டனர். அதனை முறியடிக்க ஆழ ஊடுருவும் படைப்பிரிவு களம் இறக்கப்பட்டது.

பல ஆயிரம் கிலோ மீற்றர்கள் தொலைவிலான போராளிகளின் நிலைகளையும் அவர்களின் உயர்மட்டத் தளபதி களையும் அழிக்க உலங்குவானூர்திகளில் இரகசியமான முறையில் காடுகளுக்குள் இந்த அணிகள் இறக்கி விடப்பட்டன. இதில் அமெரிக்கர்களும் வியட்நாமிய துணை இராணுவப் குழுவினரும் இருந்தனர். அத்துடன் துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த வியட்நாமி யர்களை மக்களுக்குள் ஊடுருவ விட்டனர். அவர்கள் மக்களோடு மக்களாக விவசாயக் கூலிகளாகவும் தொழிலாளர்களாகவும் ஊடுருவினர்.

மக்களிடம் பேசி போராளிகளின் நிலைகள் பற்றி அறிய இந்த ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களைப்பொறுத்தவரை தமக்குத் தெரிந்ததை தன் சகோதரனுக்கோ பிள்ளைகளுக்கோகூட சொல்லாத இரகசியம் காத்தலின் மூலம் அங்கு போராளிகள் பற்றிய தகவல் ஆழ ஊடுருவும் அணிக்கு அந்த வகையில் கிடைக்கவில்லை.

அமெரிக்க ஹொலிவூட் படங்களில் வருவதுபோல இந்த ஆழ ஊடுவும் அணியினரால் பெரிய அழிவைப் போராளிகளுக்கு ஏற்படுத்த முடியவில்லை. பல, பல அணிகளாக அமெரிக்காவின் ஆழ ஊடுருவும் அணிகள் வியட்நாம் போராளிகளின் பகுதிகளுக்குள் தீவிரமாக ஊடுருவ விடப்பட்டன. துணை இராணுவக் குழு வியட் நாமியர்கள் புலனாய்வுத் தகவல் களுக்கு ஊடுருவ விடப்பட்டனர். உலகில் இந்த அணிக்கு அமரிக்கா பெரும் பரப்புரை செய்து வியட்நாம் மக்களை பீதியுற வைக்கும் உளவியல் போரும் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் வியட்நாம் தளபதி ஜெனரல் கியாப்பின் முறியடிப்பு உத்திகள் அவர்களை கதிலங்க வைத்தன. காடுகளை கரைத்துக் குடித்த போராளிகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் கலக்கத்தை கொடுத்தது ஆச்சரியமான விடயம் அல்ல. கெரில்லாப் போராளிகளுக்கு இடையில் கெரில்லாப் போர் முறையினை ஒரு மரபாக கொண்டு வந்தபோது தொடக்கத்தில் திகைத்த போராட்ட அணியினர் ஒரு குறிப்பிட்ட காலத்தை அமெரிக்க உத்திகளை பகுப்பாய்வு செய்ய செலவிட்டனர். இதன் பின் அவர்களின் உத்திகளை கற்றுக் கொண்டு அவர்கள் முறி யடிப்பை தொடங்கினர்.

இதன் விளைவாக அமெரிக்கத் தளங்களில் ஊடுருவி தாக்குதல்களை நடத்தி பெரும் போர் மூலம் அமெரிக்கப் படைகளை ஓட, ஓட விரட்டினர் வல்லரசுப் படைகள் ஓடின. கடைசியில் கப்பலில் இருந்த உலங்கு வானூர்திகள் மற்றும் பெரும் போர்க் கலங்களை கடலில் தள்ளிவிட்டு தப்பியோடியதுதான் பெரும் அவலம். உலக விடுதலை வரலாற்றில் மிகப் பெரும் வரலாற்றுச் சாதனை அது.

அதே அமெரிக்கச் சூத்திரத்தை இலங்கைப் படைகள் இங்கு மேற்கொள்கின்றன. தமிழரின் இறுதிப்போரை சிதைக்கும் நோக்கில் அமெரிக்கப்பாணி ஆழ ஊடுருவும் அணிகளை கொண்டு தீவிரமாக தாக்குகின்றனர். அதன் பாணியை பகுப்பாய்வு செய்யும் காலம் முடிவடைந்து முறியடிப்புக் கான காலம் நகர்கின்றது. எதிரிகள் எதைச் செய்கின்றார்களோ அதுவே அவர்களின் அழிவுக்கு காரணமாகும் என்ற வரலாற்றின் முன்னோடியான வியட்நாம்தமிழீழ மக்களுக்குபடிப் பினையான ஒன்று.

**இணையப்பார்வை**

## இராசி பலன்

**24.06.2006**
**(ஆனி 10, சனிக்கிழமை)**
**சதுர்த்தசி முன்னிரவு 10.28 மணிவரை**
**ரோகினி பிற்பகல் 3.58 மணிவரை**
**இராகுகாலம் 8.55-10.25மணிவரை**
**சுபநேரம் 2.55-4.25 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும், குடும்பக் கவலை, புதிய முயற்சி. |
| இடபம் | சகோதரர் உதவி, போசன சுகம், நல்ல முயற்சி, உடல் நலம். |
| மிதுனம் | உஷ்ண நிலை, செல்வாக்கு குறைவு, காரிய தாமதம், பணவிரயம். |
| கடகம் | முயற்சி கைகூடும், போசன சுகம், நண்பர்கள் உதவி, கீர்த்தி. |
| சிங்கம் | அதிகாரம், பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம். |
| கன்னி | திடீர் பயணம், கட்டுப்பாடு பிதாசிந்தை, எதிர்பாராத நன்மை. |
| துலாம் | வாகனபயம், ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், மரியாதைக்குறைவு. |
| விருச்சிகம் | களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம், கீர்த்தி. |
| தனுசு | பகைவர் நேசம், தொழில் முயற்சி, நற்பெயர், விருந்துபசாரம். |
| மகரம் | புத்திரரால் கவலை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| கும்பம் | புதிய விடயம், மனச்சோர்வு, சத்துரு ஜெயம், சுபசெலவு. |
| மீனம் | எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம், சுவாரஸ்யம், பிரயாண நன்மை. |

- வளவன்

## சிறுவர் கடத்தலைத் தடுக்குமாறு கோருகிறது யுனிசெப் அமைப்பு

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் சிறார்கள் கடத்திச் செல்லப் படுதலைத் தடுக்க வேண்டும் என்று யுனிசெப் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. யுனிசெப் அமைப்பு இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் கருணா குழு வினர் சிறார்களை கடத்திச்சென்று தங்களது குழுக்களில் கட்டாயமாக இணைத்துக் கொள்வதை தடுத்துநிறுத்த வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒருவார காலத்தில் இது தொடர்பில் 30க்கும் மேற்பட்ட சம்ப வங்கள் நடந்துள்ளது கடந்த மார்ச் மாதத்திலிருந்து 18வயதுக்குறைவானோர் கடத்தப்படுவதும் கட்டாயமாக குழுக்களில் சேர்த்துக்கொள்ளப் படுவதும் அதிகரித்துள்ளது.

இக்கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும் சிறார்களுக்குரிய சட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். கடத்தப்பட்ட சிறாரின் பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு உரிய விவரங்களை சேகரித்து வருகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலையிலிருந்து சிங்கள மாணவரை நீக்க நடவடிக்கை

நாட்டில் நிலவும் நிலைமையை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பிரதேச பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று வரும் சிங்கள மாணவர்களை அங்கிருந்து நீக்கிக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியஆணைக் குழு கவனம் செலுத்தி வருகின்றது.

ஹெப்பிற்றிக்கொல்லாவ கிளை மோர் தாக்குதலை அடுத்து இது தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர்காமினிசமரநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒருங் கிணைக்கப்பட்ட வவுனியா வளாகத்தில் 160 சிங்கள மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களை ராஜரட்டை பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்வதற்குதிட்டமிட்டுள்ளதாகவும் இது குறித்து எதிர்வரும் 29 ஆம் திகதி இறுதித் தீர்மானம் ஏ்டுக்கவுள்ளதாகவும் ஆணைக் குழுவின்தலைவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த 17 சிங்கள மாணவர்களை ஏற்கனவே அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக யாழ்ப்பாணம்மற்றும் கிழக்கு பல்கலைக் கழகங்களிற்கு புதிய வருடத்திற்கு சிங்கள மாணவர்களை சேர்த்துக் கொள்ளா மலிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## அரச நியமனம் பெறும் ஊழியர்கள் இரு மொழித்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

அரசாங்க நியமனம் பெறுவோர் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் சேவையாற்றக்கூடிய தகைமை பெற்றிருக்க வேண்டும். இது தொடர்பான புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப் படும். இந்த யோசனை அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் டியூ. குண சேகர கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

தமிழ்மொழியை முழுமையாக அரச திணைக்களங்களில் அமுல் படுத்தினால் நாட்டின் பிணக்கில் 50 வீதத்திற்குத் தீர்வு காணலாம். இதனை கவனத்தில் கொண்டே இந்த சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

உத்தேச திட்டத்தின்படி அரச திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர் மட்டத்தில் நியமனம் பெறுவோர் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் க. பொ. சாதாரண தகைமை பெற்றிருக்க வேண்டும் அரசாங்க லிகிதர் நியமனத்திற்கு எட்டாம் தர மாற்று மொழி தகைமை பெற்றிருக்க வேண்டும்.

சிற்றூழியர் தொழில்நுட்ப நியமனம் பெற மாற்று மொழியில் பேசக்கூடிய தகைமை பெற்றிருக்க வேண்டும்.

இரு மொழிகளில் கடமையாற்றக்கூடிய அரச ஊழியர்களுக்கு மேலதிக சம்பள உயர்வும் விசேட படியும் வழுங்கப்படும். அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி யோசனைக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அது தொடர்பான சட்டம் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப் படும் என்றும் டியூ குணசேகரமே லும் தெரிவித்தார். (த-7)

**அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்**



**4ஆம் நாள் 24.06.2006**
**(அன்னவாகனத் திருவிழா)**



**ஓய்ந்திருக்க வோர் வழி செய்!**

*காய்ந்த முகங்களே காணுமெம் பூமியிது*
*வேய்ந்த கூரைகள் விறகாம் காலமிது*
*மாய்ந்து உழல்கிறோம் மயிலணிக் கந்தையா*
*ஓய்ந்தி ருக்கவோர் வழிசெய் ஐயனே!*

கலாபூஷணம் சு. துரைசிங்கம்

# பணமோசடியில் ஈடுபட்டவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒருவரிடம் பணம் பெற்று ஏமாற்றிய நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்று ஒருவருடச் சிறைத் தண்டனையும் ரூபா 25,000 அபராதமும் விதித்தது. இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

துன்னாலை பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வெளிநாடு ஒன்றில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து ரூபா 1,10,000 பெற்றபோதிலும் வெளிநாட்டில் வேலை வழங்காத காரணத்தால் பருத்தித்துறை நீதிமன்றில் பாதிக்கப்பட்ட நபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நீதிபதி க.அரியநாயகம் வழங்கிய தீர்ப்பில் மோசடி செய்த குற்றத்திற்காக 1 வருட சிறைத் தண்டனை வழங்கியதுடன் ரூபா 25,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த 25,000 அபராதத்தை செலுத்தத் தவறின் மேலும் 4 மாதம் சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை மேற்படி நபர் வேறு ஒரு நபரின் உதவியுடனேயே மேற்படி வேலைவாய்ப்பு தொழிலில் ஈடுபட்டதாகவும் அவர் தற்போது தலைமறைவாகியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (து-101)

# வீடுகள் கையளிப்பு



வீட்டுச் சாவியை பயனாளியிடம் கையளிக்கும் போது...



கையளிக்கப்பட்ட வீடு...

(யாழ்ப்பாணம்)

கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்டு வரும் நிரந்தர வீடுகளின் ஒரு பகுதியாக 80 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்கு வைபவ ரீதியாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்விற்கு நிறுவன இயக்குனர் கியோ.ஜெயக்குமார் தலைமை வகிக்க, பிரதம விருந்தினராக யாழ். ஆயர் அதி மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் கே.கணேஷம் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்விற்கு பிரதேச அரச உத்தியோகத்தர்களும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் கியூடெக்- கரித்தாஸ் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (க)

# கடற்புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க நாம் தயார்!

## கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கடற்புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க கடற்படை தயாராக இருப்பதாக கிழக்கு பிராந்திய கடற்படை தளபதி எஸ்.ஆர்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடல்சார் நடவடிக்கைகளில் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும் அத்தகைய தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்திருக்கிறோம்.

கடற்பிரதேசத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் மேற்கொண்டுள்ளோம். உலகில் மிகச் சிறந்த கடற்படைகளில் ஒன்றாகிய எமது கடற்படை இத்தகைய பல தாக்குதல்களுக்கு முகம்கொடுத்துள்ளது.

இத்தகைய தாக்குதல்களை முறியடிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த கடற்படை அதிகாரிகள் எம்மிடம் உள்ளனர்.

திருகோணமலை கடற்படை தளமானது மிகவும் முக்கியமானது. ஆசியாவின் இரண்டாவது இயற்கைத் துறைமுகம் அது. அதன் மீது பலமான தாக்குதல் நடத்தப்பட்டபோதும் கூட அதனைப் பாதுகாத்துள்ளோம் என்றார்.

இதேவேளை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் கடற்படையினரின் 15க்கும் மேற்பட்ட அதிவேக தாக்குதல் டோராப் படகுகளை கடற்புலிகள் தாக்கியழித்துள்ளனர் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# இரவுநேர தொலைக்காட்சி சேவைக்குத் தடை; ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பு!

இரவுநேர தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளமையானது தகவல் அறியும் உரிமையை மீறுவதாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார இதுபற்றிக் கூறுகையில்,

அரசாங்கத்தின் இம்முடிவானது ஊடகத்துறையினரின் சுதந்திரத்தை சீர்குலைப்பதுடன் சர்வாதிகாரத்தனமானதுமாகும்.

இந்த முடிவை அரசாங்கம் செயற்படுத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூர்ய இதுபற்றிக் கூறுகையில்,

மிகவும் மலினமான அரசியல் இலாபங்களுக்காக இத்தகைய முடிவை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றார்.

அத்துடன் இலங்கையில் அதிகரித்துள்ள மனிதாபிமானமற்ற படுகொலைகளை தடுத்துநிறுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் கரு ஜயசூர்ய கேட்டுக் கொண்டார். (கு)

## நூல் வெளியீடு

(கொழும்பு)

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதனால் தொகுக்கப்பட்ட ஈழத்திலுள்ள 80க்கு மேற்பட்ட சிவாலயங்களின் வரலாறும் தகவல்களும் கொண்ட 'ஈழத்துச் சிவாலயங்கள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் சி.தியாகராசா (எஸ்.ரி.ஆர்) தலைமையில் நடைபெறும். (து)

# உதவி கிடைக்காதவர்கள் உடன் பதிவு செய்யலாம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீன் வியாபாரிகளால் இதுவரை தமக்கு எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை என வழங்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்து யாழ்.மாவட்ட செயலக சுனாமி தரவு சேகரிப்பு நிலையத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தரவுகள் சேகரிக்கப்பட்ட பின்னர் உதவி வழங்கும் நிறுவனங்களிடம் இது தொடர்பாக கலந்துரையாடி அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யவுள்ளதாக சுனாமி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-132,133)

# சட்டவிரோத மது விற்பனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு, சாராயம் தயாரிப்பிலும் கள் விற்பனையிலும் ஈடுபட்ட 17 பேர் யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத சாராய விற்பனையில் இரண்டுபேரும், கசிப்பு தயாரிப்பில் நான்கு பேரும், கள் விற்பனையில் பதினொரு பேரும் பிடிக்கப்பட்டதுடன் சாராய வழக்கில் ஒருவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் மற்றவர்களுக்கு 3000 ரூபா தண்டமும் 2000 ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கசிப்பு வழக்கில் ஒருவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் மற்றைய மூவருக்கும் மொத்தமாக 45 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 15ஆயிரம் ரூபா தர்மப்பணமும் கள் வழக்கில் 10ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டதாகத் தெரிகிறது.

தற்போதைய சூழ்நிலையில் தமது களப் பரிசோதனைகளை செவ்வனே மேற்கொள்ள முடியாத நிலையிலும் கடமையில் ஈடுபட்டு வருவதாகக் கள உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (து-133)

# ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தில் பேரணி

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் பாதிக்கப்படுவதை எதிர்த்து ஜூலை 8ஆம் திகதி தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் அனைத்துக் கட்சிப் பேரணி நடைபெறவுள்ளது என்று அதன் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருமாவளவன் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நாளுக்குநாள் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புகள் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டும்.

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் பாதிக்கப்படுவதை எதிர்த்து ஜூலை 8ஆம் திகதி தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் அனைத்துக் கட்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

பேரணியில் கலந்துகொள்ளுமாறு அனைத்து கட்சித் தலைவர்களுடன் விரைவில் பேசவுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். (கு)

# இலங்கைக்கு அமெரிக்கா 50 மில்லியன் ரூபா உதவி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளை உருவாக்க 50 மில்லியன் ரூபாவை அமெரிக்கா இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெஃப்ரி லுன்ஸ்டெட் மற்றும் இலங்கை திறைசேரி செயலாளர் ஜயசுந்தர ஆகியோர் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர். இந்த உதவியானது மாத்தறை மற்றும் அம்பாந்தோட்ட மாவட்டங்களில் செயற்படுத்தப்படவுள்ளது. (க)

## புன்னாலைக் கட்டுவனில் மத்திய மருந்தகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்து புதிய கட்டடத்தை திறந்து வைப்பார். சிறப்புவிருந்தினர்களாக யாழ்ப்பாணம் கட்ட திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகனேசன், யாழ்ப்பாண பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி ந.கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

## மக்கள் விசனம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி சரசாலை வடக்குப் பகுதியின் பிரதான வீதியூடாக மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆனால் உட் பிரதேசங்களுக்கு மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த போதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இதுகுறித்து உயர் அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-37)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10மணி பூசை முடிவுற்றதும் 'நம்பிக்கையே நாயகன்' என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் நித்தியதசீரதன் ஆன்மீகச் சொற்பொழி வாற்றுவார். (க-35)

## மஹோற்சவம்

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி அபிரதபாஜினி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (த-37)

* * *

(மருதங்கேணி)

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா இடம்பெறும்.

அடுத்த மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (க-35)

## இன்று ஒரு தகவல்

# இசைமேதை எஸ்.ஜி.கிட்டப்பா

1983 ஆம் ஆண்டில் ஒருநாள்... மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் திருமங்கலத்தில் ஒரு நாடகம் நடந்துகொண்டிருந்தது. நந்தனார் நாடகம். வழக்கமாக நந்தனார் வேஷம் போட்டவருக்கு உடல் நிலை சரியில்லை. இருந்தாலும் அவருக்காக ஏராளமான ரசிகர்கள உட்கார்ந்திருக்கிறார்கள். நந்தனார் வேஷம் போட வேண்டிய அந்த மாபெரும் கலைஞர் வேதியர் வேஷம் போட்டார்.

அவரால் நிற்கக்கூட முடியவில்லை. ஒரு கதிரையில் உட்கார்ந்துகொண்டு அவருக்குப் பணிவிடை செய்வதற்காக மனைவி என்று ஒரு பாத்திரத்தை உருவாக்கி அவரது கையில் ஒரு விசிறியைக் கொடுத்து விசிறிக் கொண்டே இருப்பது போல் ஏற்பாடு செய்தார்கள். வேதியராக நடித்து ஒரு வழியாக நாடகத்தை நடத்தி முடித்தார்கள். இருந்தாலும் மக்களுக்கு நந்தனார் பாடலை அவர் பாடி... அதைக் காதால் கேட்கவேண்டும். அப்படிக் கேட்காவிட்டால் ஒரு திருப்தி இருக்காது. அதனால் "நந்தனார் பாடலை நீங்கள் பாடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அவரும் மக்களின் உணர்வைப் புரிந்துகொண்டு வேதியர் வேஷத்தில் இருந்துகொண்டே நந்தனார் பாடலைப் பாடினார்.

அதுதான் அவருக்குக் கடைசி நாடக மேடை என்பதும் அதன்பின் கொஞ்ச நாளிலேயே இந்த உலகை விட்டே போகப் போகிறார் என்பதும் அப்போது அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இருந்தாலும் அப்போது அவர் பாடிய பாட்டு என்ன தெரியுமா? "நாளை போகாமல் நான் இருப்பேனா?" என்ற பாட்டுத்தான். இப்போது தெரிகிறதா அந்தக் கலைஞர் யாரென்று? இசைமேதை எஸ்.ஜி.கிட்டப்பாதான்.

செங்கோட்டையில் பிறந்தவர். தவத்திரு சங்கரதாஸ சுவாமிகளிடம் நாடகப் பயிற்சி பெற்றவர். அந்தக் காலத்தில் நாடக உலகில் இவர் மிகவும் பிரபலம். 1933ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி அவர் இறந்துவிட்டார். திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை இவருக்கு நெருக்கமான நண்பர்.

ஒருமுறை தஞ்சாவூரில் எஸ்.ஜி.கிட்டப்பாவின் நாடகம் நடந்துகொண்டிருக்கிறது. அந்தப் பக்கத்தில் இருந்த முக்கியமான இசைக்கலைஞர்கள் எல்லாம் வந்து முதல் வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளையும் உட்கார்ந்திருக்கிறார். முக்கியமான இசைமேதைகள் எல்லாம் முன்வரிசையில் வந்து உட்கார்ந்திருப்பதை கிட்டப்பா பார்த்தார். அவருக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. மிகவும கம்பீரமாகப் பாட ஆரம்பித்தார்.

"கோடையில் இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே" என்று பாடிக்கொண்டிருக்கிறார். அந்தப் பாடலில் வெவ்வேறு ராகம் வரும். ராக மாலிகை. அதில் காபிராகம் ஒரு இடத்தில் வரும். அது வரையும் பாடிக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் நாடகமேடை விளக்கு அணைந்து மீண்டும் எரிந்தது. முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த இசைமேதைகளைப் பார்த்தார். அவர்கள் உட்கார்ந்திருந்த இடம் காலியாக இருந்தது. அவர்களைக் காணவில்லை.

இதைப் பார்த்தவுடனே உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்த கிட்டப்பாவுக்கு மனம் சங்கடமாகிவிட்டது. நான் பாடும் பாட்டு தரம் குறைந்துவிட்டதோ என்று நினைத்தார். மிகவும் மனம் கலங்கிப்போய் நாடகப் படுதாவை விடச் சொல்லிவிட்டார். அந்த சமயத்தில் ராஜரத்தினம்பிள்ளை மட்டும் முன்வரிசையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவரை உடனே உள்ளே வரவழைத்தார். தன் மனக் கஷ்டத் தைச் சொன்னார்.

ஆனால் ராஜரத்தினம்பிள்ளை சொன்னதைக் கேட்டதும் அவருக்கு மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. அவர் கிட்டப்பாவிடம் என்னசொன்னார் தெரியுமா? "நீங்கள் அந்தக் காபிராகத்தை மிகவும் பிரமாதமாகப் பாடினீங்கள். அது மனதில் நிற்கும் இந்த சமயத்திலேயே மறந்துவிடாமல் அதைப் பாடி சாதகம் செய்வதற்காக அந்த இசைமேதைகள் எழுந்து போயிருக்கிறார்கள். அதை என்னிடம் கூறிவிட்டுத்தான் போனார்கள்'' என்றார்.

அபபேர்ப்பட்டஅந்தக் கலைஞர் இன்று நம்முடன் இல்லை. என்றாலும் அவரது குரல் எப்போதும் நம் காதில் விழுந்துகொண்டுதான் இருக்கிறது. இந்தக் காலத்திலெல்லாம் நாம் அதுபோல ஒரு மேடையில் பாடி முதன் வரிசையில் உள்ளவர்கள் பாதியில் எழுந்துபோனால் என்ன காரணமாக இருக்கும்?

அப்படி ஒருவர் ஒருசமயம் எழுந்து போனார். மேடையில் இருந்தவர் திரைபோடச் சொல்லிவிட்டு அவர் எங்கே போகிறார் என்று பின்னால் போய் கவனித்தார். ஒருவேளை நான் பாடிய பாட்டை தனியாகப் போய் சாதகம் செய்வாரோ என்ற சபலம்.

ஆனால் அந்த ஆள் நேராக டிக்கெற் கவுண்டருக்குப் போனார். டிக்கெற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு என் காசைத் திருப்பிக்கொடு என்று கேட்டு சண்டை பிடிக்க ஆரம்பித்தார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாதுகாப்புப் பிரிவுகளில் ஊழல்மோசடிகள்; முறையான விசாரணைகள் நடத்தப்படுமாம்

## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முப்படைகள் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவுகளில் நிலவும் ஊழல் மோசடிகள் பற்றி முறை யான விசாரணை நடத்தப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்காக அரசாங்கம் அதிக நிதியொதுக்கீடுகளை மேற்கொள்கின்றது. அவை முறையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

இதனைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய தற்போதைய பாதுகாப்பு செயலாளர் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பாதுகாப்புச் சேவையை கட்டியெழுப்ப முற்படுகிறார்.

அவரது முயற்சி வரவேற்கத்தக்கது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதியின் செயலாளர் அரசதுறை சார் இணை நிறுவனங்களில் நிலவும் ஊழல் மோசடிகளை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட தேசியக் குழு ஆவணத் தொகுதியை தயாரித்துள்ளது என்றும் அவை தம்மிடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டதென்றும் கூறினார்.

மேலும் குறித்த ஆவணங்களில் நிறுவனங்கள் சார்ந்த ஊழல் மோசடிகள் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளதாகவும் இத்தகைய குற்றச் செயல்கள் பற்றி ஜனாதிபதி விசாரணைப் பிரிவு விசாரணை நடத்தும் எனவும் விசாரணையின் போது குற்றவாளிகளாக இனம் காணப்படும் நபர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# மத்திய மாகாணங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

நாட்டிலேற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் நாட்டின் சில பிரதேசங்களில் வெள்ளம் மற்றும் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

சப்பிரகமுவ, மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் சற்று பலமான காற்றுவீசும் என்றும் காலநிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காலநிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் சில பிரதேங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் பலமான மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் வெள்ளம் மற்றும் மண் சரிவு ஏற்படும் அபாயமும் இருக்கின்றது. (க-7)

# அம்பாறை கிராமங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(அம்பாறை)

அம்பாறை கிராமங்களில் இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, வாச்சிக்குடா, நாவற்குடா மற்றும் கோளாவில் பகுதிகளில் அதிகாலை 4 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உந்துருளிகளை வைத்திருப்போரை இலக்கு வைத்து படையினர் இத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

10 பொதுமக்களை விசாரணைக்காக அக்கரைப்பற்று சிறப்பு அதிரடிப்படை முகாமுக்கு கொண்டு சென்றனர். சிறப்பு அதிரடிப்படையினருடன் துணை இராணுவக் குழுவினரும் இத் தேடுதல் நடவடிக்கையின்போது உடனிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (தி)

# தபால் ஊழியர்களுக்கு சொந்தமாக சைக்கிள்கள் வழங்குவதற்கு திட்டம்

(கொழும்பு)

தபால் ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்குவது குறித்து தபால் தந்தி தொலைத்தொடர்புகள் அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

கடிதங்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் செயற்திறன் மிக்கதாக மாற்றியமைக்கவும் இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக பிரதியமைச்சர் ரேரகித அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சைக்கிள்கள் இல்லாது தபால் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

வழங்கப்படும் சைக்கிள்களை தபால் ஊழியர்களுக்கு சொந்தமாகும் அடிப்படையில் வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான வகையிலேயே தபால் ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டு வந்தன.

அந்த சைக்கிள்கள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு நூறு ரூபா வீதம் வழங்கப்பட்டபோதிலும் அது போதுமானதாக இல்லையென்று நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது 13ஆயிரத்து 280 தபால் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு சைக்கிள்களை வழங்குவதற்கு திறைசேரி நிதியை ஒதுக்கியுள்ளது. எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் புதிய சைக்கிள் கள் வழங்கும் திட்டத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# பாடசாலை அதிபர்களின் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவ/மாணவிகள் இலவசமாகப் பயணம் செய்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பருவகாலப் பயணச் சீட்டு ஒவ்வொரு ஆறு மாத காலமும் வழங்கப்படவுள்ளது.

இதன்படி உரிய பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் விபரங்களைப் பட்டியலிட்டு உறுதிப்படுத்தி இலங்கைப் போக்குவரத்து சபை -வடக்கு சாலைகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் இப் பட்டியலின்படி சபை உத்தியோகத்தர் அவ்வப் பாடசாலைக்ளுக்கு வந்து பாடசாலை பருவகாலப் பயணச் சீட்டுகளை இலவசமாக வழங்குவார்கள் என்றும் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். மேலும் இப் பருவகாலப் பயணச்சீட்டின்றி எம் மாணவர்களும் இலவசமாக பயணிக்கமுடியாது என்றும் யூலை மாதம் தொடாக்கம் டிசம்பர் மாதம் வரையான ஆறு மாத காலப் பருவச் சீட்டு வழங்க வேண்டியிருப்பதால் அதிபர்கள் காலதாமதமின்றி பட்டியல்களை அனுப்பி வைக்கும்படியும் அவர்மேலும் கேட்டுள்ளார். (க)

# விருது வழங்கி கௌரவிப்பு

(பொன்னாலை)



நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான இராஜகோபுரத்தை நிர்மாணித்த அராலி மத்தியைச் சேர்ந்த விஸ்வப்பிரம்ம ஸ்ரீ வே. யோகேஸ்வரனுக்கு தேவஸ்தான பரிபாலன சபையினர் ''சிற்ப யோக சிந்தாமணி'' என்னும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவித் துள்ளனர்.

தேவஸ்தான சிவாச்சாரியார் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் மேற்படி விருதினை பரிபாலன சபையினரின் வேண்டுதலுக்கமைய வழங்கிக் கௌரவித்திருந்தார்.

விஸ்வப்பிரம்ம ஸ்ரீ வே.யோகேஸ்வரன் ஏலவே நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய பஞ்சதள இராஜகோபுரத்தை நிர்மாணித்திருந்தமைக்காக, அவ் ஆலய பரிபாலனசபையினர் "சிற்பக்கலாவாரிதி" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விஸ்வப்பிரம்ம ஸ்ரீ வே.யோகேஸ்வரன் யாழ்.குடாநாட்டில் பழமை மிக்கதும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான பொன்னாலை வரதராஜப்பெருமாள், பறாளை முருகமூர்த்தி, கைதடி கந்தசுவாமி, ஆவரங்கால் சிவன் ஆலயம், நீர்வேலி கந்தசுவாமி, நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார், தொல்புரம் முத்துமாரி அம்மன் ஆகிய ஆலயங்களின் இராஜகோபுரங்களை நிர்மாணித்த பெருமைக்குரியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-49)

# மண்ணெண்ணெய் மீட்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கொச்சிக்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து பெருமளவு மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தி ஒன்றினுள் 7ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. பாரவூர்தியின் உரிமையாளர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-9)

# கலந்துரையாடல் திகதி மாற்றம்

இன்று சனிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெறுவதாக இருந்த யாழ்ப்பாணம் , நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00மணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையில் கிராம அலுவலர்களின் கடமைகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் குறித்த பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களை 01.07.2006மு.ப 10.00மணிக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர் என யாழ். நீதவான் நீதிமன்றப் பதிவாளர் க.மீரா அறிவித்துள்ளார். (து)



அன்புள்ள நீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்ற
தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசி தீர்ப்பவர்கள் கோடி கோடி
கோடானு காலமெல்லாம் வாழி வாழி

## நயினாதீவு – ஸ்ரீ நாகபூஷணி

## அமுதசுரபி அன்னதான சபை – 2006

## அறிவித்தல்

**Reg.No.S.236**

**ஆரம்பம் -1960 (வரைவுள்ளது)**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை 'அமுதசுரபி' என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கும் சிறந்த முறையில் அன்னதானம் தொண்டினைச் செய்து வருகின்றது. இந்த ஆண்டுடன் 46ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவை எனக் கருதி தர்ம சீலர்களாகிய வர்த்தகப் பெரும் மக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன், ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையை பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையை சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் நற்சேவை தொண்டர்களுக்கும் அமுத சுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும் தத்தம் கடமைகளை திறமையாகச் செய்த செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற பணம், பொருள் முதலிய வற்றை மனமுவந்து உதவி தரும் தர்மசீலர்களுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த பணி வார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டுகிறோம்.

*இவ்வாண்டு ஆனி மாதம் 12 ஆம் நாள்*
(26-6-2006) திங்கட்கிழமை அம்பாளின் மகோற்சவம்
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி

05.07.2006 புதன்கிழமை - மஞ்சத்திருவிழாவும்
08.07.2006 சனிக்கிழமை - சப்பறத்திருவிழாவும்
09.07.2006 ஞாயிற்றுக்கிழமை - தேர்த்திருவிழாவும்
10.07.2006 திங்கட்கிழமை - தீர்த்தத்திருவிழாவும்
11.07.2006 செவ்வாய்க்கிழமை - பூங்காவனமும்

நடைபெறவிருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாட்களும் இரவு பகல் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தர்மசீலராகிய உங்களிடம் அன்னதான சபையினால் நியமிக் கப்பெற்ற தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடியாக பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi Commercial கண. இல. 1247985001 Peoples Park கட்டடம் Pettah என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நயினாதீவு – ஸ்ரீ நாகபூஷணி,
அமுதசுரபி அன்னதான
சபையினர்.
(347)

# நள்ளிரவில் நடந்த பயங்கர கொள்ளை

வீட்டுச் சொந்தக்காரர்களை ஓர் அறைக்குள் அடைத்துவிட்டு ஆயுதம் தாங்கிய மர்ம நபர்கள் இருவர் அவ் வீட்டில் இருந்து 8 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பெருந்தொகைப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு பிரவுண் றோட்டில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள ஒரு வீட்டில் நடைபெற்றுள் ளது.

பிரவுண் றோட் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள டாக்டர் பிரதீப்குமார் என்பவரது 'சாயி மெடி ஹியர் சென்ரர்' என்ற வீட்டுக்குள் நுழைந்த இனந் தெரியாத இரு நபர்களினாலேயே இக் கொள்ளை நடாத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு நேரத்தில் மேற்படி வீட்டுக்குச் சென்ற கொள்ளை யர்கள் வீட்டுமுகப்பில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் காரை துப்பாக்கியால் சுட்டுச் சேதப்படுத்திய பின்னர் கூரை வழியாக உட்புகுந்து வீட்டுச் சொந்தக்காரர்களைத் துப்பாக்கிமுனையில் பயப்படுத்தி ஒரு அறை யினுள் அடைத்து ஒருவர் காவலுக்கு இருக்க மற்றவர் ஒவ்வொரு அறையாகப் புகுந்து அக்குவேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந் திருக்கிறார். அலுமாரி, மேசை லாச்சி எல்லாவற்றுக்குள்ளும் இருந்த பொருட்களை யெல்லாம் கொட்டிக்கிளறி பெறுமதியான பொருட்களை ஆராய்ந்திருப்பது போல வீட்டின் நிலைமை காணப்படுவதாகத் தெரிகிறது.

ஒருவழியாக வீட்டின் சொந்தக்காரர் அவரது சகோதரருக்கு தொலைபேசி மூலம் இவ்விடயத்தை அறிவித்ததையடுத்து அவர் ஸ்தலகத்துக்கு வந்ததும் திருடர்கள் கொள்ளையடித்த பொருட்களுடன் தப்பியோடி விட்டார்கள். ஓடுகிற அவசரத்தில் ஒருவர் அணிந்து வந்த ஒருசோடி பாட்டா செருப்புகளையும் கத்தியொன்றையும் அவ்விடத்திலேயே விட்டுச்சென்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

திருட வந்தவர்கள் முகத்தை வெள்ளைத் துணியால் மறைத்துக் கட்டியிருந்ததால் அவர்களை அடையாளம் காணமுடிய வில்லை என வீட்டின் சொந்தக்காரர் தெரிவிக்கின்றார். துப்பாக்கியால் சுட்டுவிட்டு திருடர்கள் நீண்டநேரம் அவ்வீட்டுக்குள் இருந்தபோதிலும் கூட பயம் காரணமாகவோ என்னவோ அயலவர்கள் எவருமே உதவிக்கு வர வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீட்டிலிருந்த சோபா, செற்றிகளின் மெத்தைகளை திருடர்கள் கத்தியால் குத்தி கிளறி இருப்பதையும் கவனிக்கக் கூடியதாக இருக் கிறது. இத் திருட்டுசம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டதையடுத்து நேற்றுபிற்பகல் கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. (து-133)


துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கார்...


கொள்ளையர்களினால் சின்னா பின்னமாக உடைமைகள்...


அலங்கோலநிலையில் ஆபரணப் பெட்டி...


கொள்ளையர் இறங்கிய முகட்டுப்பாதை...


கொள்ளையரினால் கைவிடப்பட்ட கத்தி...


கொள்ளையர் விட்டுச்சென்ற காலணி...

# ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் நூறாவது வெளியீடான ஞானச்சுடர் (சித்திரை மலர் -2006)




வெளிவந்துள்ளது.

தனது ஆன்மீக சேவையினால், அன்னதானப் பணியினால் கடல் கடந்த நாட்டிலும் தனது கால் தடம்பதித்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆன்மீகப் பணி யின் எடுத்துக்காட்டாக வெளிவந்துகொண் டிருக்கும் ஞானச்சுடர் இன்று நூறாவது மலராக மலர்ந்து சைவப் பேருலகை உவகையின் ஆழ்த்தியுள்ளது.

கடந்த காலச் சேவைகளை ஞாபக மூட்டு முகமாக முன்னையை இதழ்களில் வெளியான படங்கள்த கட்டுரைகள் இவ் விதழில் இடம்பெற்றிருப்பது பழைய சிந்தனையை மீள ஏற்படுத்துவதாக அமைகிறது.


கலை இலக்கியம் ஆன்மீகம், மருத்துவ சேவை, கல்வி வளர்ச்சி முதலிய பல துறைகளில் தடம் பதித்துள்ள இப் பேரவை துறைசார் அறிஞர்களின் கட்டுரை, கவிதைகளுடன் இந் நூறாவது இதழை வெளியிட்டுள்ளது பெருமைக்கும் பெருமிதத்துக்கும் உரிய விடயமாகும். (து)




## ஜப்பானுடன் பிரேசில் அபார வெற்றி றொனால்டோ சாதனையை சமன் செய்தார்

ஜப்பானுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் நடப்பு சம்பியனான பிரேசில் அணி 4–1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. பிரேசிலின் நட்சத்திர வீரர் றொனால்டோ இரண்டு கோல்கள் அடித்து புதிய சாதனை படைத்தார். இப்போட்டியில் தோல்வி அடைந்த ஜப்பான், உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக் போட்டியில் பிரேசில், ஜப்பான் அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் போட்டிகளில் பிரேசில் ஒரு வெற்றியையும் ஜப்பான் ஒரு தோல்வியும் ஒரு போட்டியில் சமநிலை செய்திருந்தன. இப்போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது ஜப்பான். ஆட்டத்தின் 7 மற்றும் 19 ஆவது நிமிடத்தில் றொனால்டோவுக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு அமைந்தது. இருமுறை றொனால்டினோவிடம் இருந்து பாஸ் பெற்ற றொனால்டோ கோலாக்க முயன்றார். ஆனால் அதை ஜப்பான் கோல் கீப்பர் கவாகுச்சி தடுத்துவிட்டார். ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி–கிக் வாய்ப்பை கோலாக்க முயன்ற பிரேசில் வீரர் ஜுனின்கோவின் முயற்சியும் தோல்வியில் முடிந்தது.



24ஆவது நிமிடத்தில் ஜப்பானுக்கு அருமையான வாய்ப்பு அமைந்தது. கோல் லைனுக்கு அருகே உதை செய்ய முயன்ற அகிரா காஜியின் கனவை கலைத்தார் பிரேசில் வீரர் கில்பர்டோ. விடாமுயற்சியோடு போராடிய ஜப்பான் அணிக்கு ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது. அலெக்ஸ் கொடுத்த அருமையான பாஸைப் பெற்ற கெய்ஜி டமாடா பிரேசிலுக்கு அதிர்ச்சி அளிக்கும்வகையில் கோல் அடித்து அசத்தினார். திகைத்துப் போன பிரேசிலுக்கு நட்சத்திர வீரர் றொனால்டோ 46ஆவது நிமிடத்தில் ஆறுதல் அளித்தார். இம்முறையும் பாஸ் செய்து கொடுத்தவர் றொனால்டினோ தான். இவர் கொடுத்த பாஸைப் பெற்ற ராபின்கோ



தலையால் முட்ட அது றொனோல்டோவை நோக்க வந்தது. நொடிப்பொழுதில் தலையால் முட்டி கோலாக்கினார் றொனால்டோ இதன்மூலம் உலகக் கோப்பை வரலாற்றில் ஜாம்பவான் பீலேயின் (12கோல்) சாதனையை முறியடித்தார் றொனால்டோ (13கோல்).

முதல் பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்திருந்தன. இரண்டாவது பாதியில் பிரேசில் முன்னிலை பெற கடுமையாகப் போராடியது. முதல் பாதியில் பிரேசிலின் கோல் மழையை பெருமளவு கட்டுப்படுத்திய ஜப்பான் கோல் கீப்பர் கவாக்குச்சி 2ஆவது பாதியில் சோபிக்கத் தவறினார். ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் ஜுனின் கோ 120அடி தூரத்திலிருந்து அடித்த உதை கோலாக மாறியது. இந்த அதிர்ச்சியிலிருந்து ஜப்பான் மீண்டு வருவதற்குள் பிரேசிலின் கில்பர்டோ 59ஆவது நிமிடத்தில் அற்புதமாக கோல் அடித்தார். றொனால்டினோ கொடுத்த அழகான பாஸ் சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் கில்பர்யடாவுக்கு முதல் கோலை பெற்றுத் தந்தது.

பிரேசில் முன்னிலை பெற காரணமாக இருந்த றொனால்டினோ ஆட்டத்தின் 71ஆவது நிமிடத்தில் வெளியேறினார். அவருக்குப் பதில் மாற்று வீரராக ரிகார்டினோ களமிறங்கினார். இரண்டாவது பாதியில் உலகச் சம்பியனான பிரேசிலின் ஆட்டத்திற்கு ஜப்பான் ஈடுகொடுக்க முடியவில்லை. கடந்த 2 லீக் போட்டிகளில் பதற்றத்துடன் விளையாடி வந்த பிரேசிலின் நட்சத்திர வீரர் றொனால்டோ நேற்றைய போட்டியில் கலக்கிவிட்டார். பிரேசில் அணிக்காக தனது முதல் கோலை அடித்த இவர் 81ஆவது நிமிடத்தில் 2ஆவது கோலை அடித்தார். இதுவரை உலக கோப்பை தொடர்களில் 14கோல்கள் அடித்துள்ள றொனால்டோ அதிக கோல் அடித்தவர் பட்டியலில் முதல் இடத்தில் உள்ள ஜேர்மனியின் முல்லர் சாதனையை சமன் செய்தார். இறுதியில் பிரேசில் 4–1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் குழு 'எவ்' பிரிவில் 9புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தது பிரேசில்.

## கானா அபார வெற்றி அமெ.ஆக்கிரமிக்க முடியவில்லை

டிராமினி, அப்பையா இருவரின் அபார ஆட்டத்தினால் அமெரிக்காவுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் 2–1என்ற கோல் கணக்கில் கானா சிறப்பான வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் மூலம் உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு கானா தகுதி பெற்றது. நூரம்பர்க்கில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக்போட்டியில் 'ஈ' பிரிவை சேர்ந்த அமெரிக்கா, கானா அணிகள் மோதின. குழு 'ஈ' பிரிவில் இடம்பெற்றுள்ள நான்கு அணிகளுக்கும் இரண்டாவது சுற்றில் பங்கேற்க இழுபறி நிலை நீடிப்பதால் இப்போட்டி முக்கியமான போட்டியாக அமைந்தது.

ஆரம்பம் முதலே கானா துடிப்புடன் செயல்பட்டது. ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் கிளாடியோ றெய்னாவிடமிருந்து பந்தை கைப்பற்றிய கானா வீரர் ஹமினு டிராமனி கோல் லைனை குறிவைத்து அடித்த கிராஸ் உதை கோலாக மாறியது. இதற்கு அமெரிக்காவின் கிளைண்ட் டெம்ப்சி 43 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார். அமெரிக்காவின் மார்கஸ் பேஸ்கலியிடம் இருந்து பாஸ் பெற்ற டெம்ப்சி கோல் அடித்து அசத்தினார். சமநிலை அடைந்து விட்டோம் என அமெரிக்கா மகிழ்ந்த நேரத்தில் அடுத்த நிமிடத்திலேயே கானா மற்றொரு கோல் அடித்து அதிர்ச்சி அளித்தது. பெனால்டி ஏரியாவில் வைத்து கானா வீரர் ரசாக் பிம்பாங் அமெரிக்காவின் ஒகுசியால் தாக்கப்பட பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பை கோலாக மாற்றினார் ஸ்டீபன் அப்பையா. முதல் பாதியில் கானா 2–1 என்ற முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் அமெரிக்கா கோல் அடிக்க கடும் முயற்சி செய்தது. கானா வீரர்களின் பாதுகாப்பான ஆட்டத்தின் முன் அமெரிக்காவின் எண்ணம் ஈடேறவில்லை. இறுதியில் கானா 2–1 என்ற கோல் கணக்கில் சிறப்பான வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் மூலம் குழு 'ஈ' பிரிவில் 6 புள்ளிகள் பெற்று உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது கானா. மூன்று லீக் போட்டிகளிலும் சேர்த்து 1 புள்ளி மட்டுமே பெற்ற அமெரிக்கா தொடரை விட்டு வெளியேறியது.

## குரோஷியாவுடனான போட்டியை சமநிலை செய்து ஆஸி. இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது

அவுஸ்திரேலியா, குரோஷியா அணிகள் பற்கேற்ற லீக் போட்டி சமநிலையில் முடிந்தது. இதன்மூலம் அவுஸ்திரேலியா உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தது. ஸ்டட்கார்ட்டில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக் போட்டியில் குரோஷியா அவுஸ்திரேலியா அணிகள் மோதின. முன்னதாக நடந்த இரண்டு லீக் போட்டிகளில் அவுஸ்திரேலியா ஒரு வெற்றி ஒரு தோல்வியை பதிவு செய்திருந்தது. குரோஷிய அணி ஜப்பானுக்கு எதிரான ஒரு போட்டியை மட்டும் சமநிலை செய்தி



ருந்தது. இரு அணிகளும் வெற்றிபெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கின.

ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் குரோஷிய வீரர் டாரிஜோ சர்னா முதல் கோலை



அடித்தார். இதற்கு 38ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது அவுஸ்திரேலியா. கிரைக் மூர் கோல் அடித்து குரோஷியாவை சமன் செய்தார். முதல் பாதிவரை இதேநிலை நீடித்தது. இரண்டாவது பாதியில் குரோஷியாவின் நிகோகோவக் கோல் அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார். 79ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலியாவின் கெவல் அடித்த கடைசி கோல் ஆட்டத்தை சமநிலை செய்தது. இதன்மூலம் குழு 'எவ்' பிரிவில் அவுஸ்திரேலிய அணி 4 புள்ளிகள் பெற்று இரண்டாவது சுற்றில் நுழைந்தது.

## செக்குடியரசை வென்று இத்தாலி இரண்டாவது சுற்றில்

செக்குடியரசுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் இத்தாலி 2–0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றில் இத்தாலி நுழைந்தது. கடைசி வரை போராடிய செக்குடியரசு தோல்வியோடு தொடரை விட்டு வெளியேறியது.

ஹாம்பர்க்கில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக் போட்டியில் குழு 'ஈ' பிரிவை சேர்ந்த இத்தாலி, செக்குடியரசு அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் போட்டிகளில் இத்தாலி ஒரு வெற்றி, ஒரு சமநிலையையும், செக்குடியரசு ஒரு வெற்றி ஒரு தோல்வியும் பெற்றிருந்தன.



இரண்டாவது சுற்றில் பங்கேற்க இரு அணிகளும் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் நேற்று முன்தினம் களமிறங்கின. ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் செக்குடியரசுக்கு கிடைத்த கோனர் வாய்ப்பு வீணானது. அடுத்த நிமிடத்தில் இத்தாலிக்கு கிடைத்த பிறி–கிக் வாய்ப்பும் பலன் இல்லாமல் கைநழுவியது.

ஆட்டத்தின் எட்டாவது நிமிடத்தில் செக்குடியரசு வீரர் பாவல் நெட்வட்டிடம் 'பாஸ்' பெற்ற மிலன் பரோஸ் கோல் லைனை நோக்கி சொட் அடித்தார். ஆனால் அது இத்தாலி கோல் கீப்பர் பபோனிடம் சரணடைந்தது. 11ஆவது நிமிடத்தில் செக்குடியரசுக்கு கிடைத்த மற்றொரு வாய்ப்பையும் பபோன் தடுத்துவிட்டார். ஆட்டத்தின் 26 ஆவது நிமிடம் இத்தாலிக்கு மகிழ்ச்சி அளித்த நேரமாக அமைந்தது. கோனர் வாய்ப்பை



இத்தாலி வீரர் டோட்டி அடிக்க, அதை தலையால் முட்டிய மார்கோ மாட்ரசி ஆட்டத்தின் முதல் கோலை அற்புதமாக அடித்தார். முதல் பாதியில் கோல் அடிக்க செக்குடியரசு கடும் முயற்சி செய்தது. ஆனால் 1–0 என்ற கோல் கணக்கில் இத்தாலி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இத்தாலி வீரர்கள் தடுப்பாட்டம் ஆடினர். செக்குடியரசின் கோல் அடிக்கும் முயற்சியை பலமுறை தடுத்தனர். அதேநேரத்தில் இத்தாலி முன்னிலை பெற இரண்டு வாய்ப்புகள் அமைந்தது. ஆட்டத்தின் 50ஆவது, 55ஆவது நிமிடங்களில் கிடைத்த அந்த வாய்ப்பு கண் இமைக்கும் நேரத்தில் கைநழுவியது.

இதேபோல் ஆட்டத்தின் 68ஆவது நிமிடத்தில் கிடைத்த கோல் வாய்ப்பை இத்தாலி வீரர் பிலிப்போ இன்சாகி வீணாக்கினார். இதற்குப் பரிகாரமாக 87ஆவது நிமிடத்தில் செக்குடியரசு கோல் கீப்பர் பீட்டர் செக்கின் தடையை மீறி இத்தாலியின் வெற்றியை உறுதிசெய்தார் இன்சாகி. செக்குடியரசால் கடைசி வரை கோல் எதுவும் அடிக்கமுடியவில்லை.

இறுதியில் 2–0 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் குழு 'ஈ' பிரிவில் இத்தாலி 7 புள்ளிகள் பெற்று இரண்டாவது சுற்றில் நுழைந்தது. 3 புள்ளிகள் பெற்ற செக்குடியரசு உலக கோப்பை தொடரை விட்டு வெளியேறியது.

அமிர்தன்

## ரவுண்ட் அப் '16' சுற்று

### இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| ஜேர்மனி – சுவீடன் | முனீச் | 8.30 (இரவு) |
| ஆர்ஜென்டினா – மெக்சிக்கோ | லிப்ஸிக் | 12.30 (நள்ளிரவு) |

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

06



ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பிறகு ஒரு பிரச்சினை கிளம்பியது. காங்கிரஸ் கட்சி சட்ட சபைக்குச் செல்வதா வேண்டாமா என்பதே அது. தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், மோதி லால் நேரு, எஸ்.சீனிவாச ஐயங்கார், புலாபாய் தேசாய், சத்தியமூர்த்தி ஆகியோர் தலைமையில் சுயராஜ்யக் கட்சி தோன்றியது. சட்ட சபைக்குச் செல்ல வேண்டும் என்பதை இவர்கள் ஆரித்தனர். ராஜாஜி தலைமையில் சட்டசபை பகிஷ்காரக் கட்சி வேலை செய்தது. காங்கிரஸ் என்ன தீர்மானம் செய்கிறதோ அதன்படிதான் நடப்பேன் என்று காமராஜ் அப்போது உறுதியாக இருந்தார். இதனால் சத்தியமூர்த்தியுடன் சேர்ந்து அவர் வேலை செய்யவில்லை.

சுயராஜ்யக் கட்சி சட்டசபை வேலைகளைக் கவனிக்கும்படி காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. கட்சியின் தீர்மானத்திற்குப் பிறகு, காமராஜ், சத்தியமூர்த்தியுடனும் சீனிவாச ஐயங்கரோடும் வேலைசெய்தார். 1926 இல் நடைபெற்ற தேர்தலில் தேர்தல் பிரச்சாரம் செய்ய விருதுநகரில் இருந்து ஒரு தொண்டர் படையுடன் ஸ்ரீவைகுண்டம் , நாசரேத் , ஏரல் ஆகிய ஊர்களில் வேலைசெய்தார். தொண்டர் படையில் நானும் ஒருவன். என்னை ஏரல் என்ற ஊரில் இறக்கிவிட்டுத் தேர்தல் வேலையில் ஈடுபட வைத்தார் தலைவர்.

இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் சிப்பாய்க் கலகம் ஆகும். 1857இல் நடந்த அந்தப் போராட்டத்தில் இந்திய மக்களை ஜெனரல் நீல் என்னும் வெள்ளையன் சித்திரவதை செய்தான். நீல் என்ற அந்த வெள்ளையனின் சிலை சென்னை மவுண்ட்ரோடில் இருந்தது. அந்தச் சிலையை அப்புறப்படுத்தும் கிளர்ச்சி ஆரம்பமானது. இதில் பலர் கைதுசெய்யப்பட்டனர். குடியாத்தம் சாமிநாத முதலியார் , சோமயாஜுலு ஆகியோர் இந்த இயக்கத்தில் கைதானார்கள். இவர்கள் சிறை சென்ற பிறகு, கிளர்ச்சியை நடத்தக் காமராஜ் முன்வந்தார்.

1927 ஆம்ஆண்டு செப்டம்பரில் காந்திஜி சென்னைக்கு வந்தார். சீனிவாச ஐயங்கார் வீட்டில் அவர் தங்கியிருந்தார். நீல் சிலையை அகற்றும் போராட்டம் குறித்துக் காந்திஜியின் ஆலோசனையைக் கேட்க அவரைப் போய்ப் பார்த்தார் காமராஜ். காந்திஜியுடன் ஆலோசனை கலந்தார். காந்திஜி ஆலோசனை கூறி அனுமதிதந்தார். பலாத்காரம் எதுவும் இன்றி நமது வெறுப்பை மட்டும் உணர்த்தும் வகையில் செயல்படுங்கள் என்று ஆசி வழங்கினார். வன்முறையில் இறங்காமல், சிறு களிமண் உருண்டைகளை சிலையின் மீது போடலாம் என்று மட்டுமே கொடுத்தார் காந்திஜி. இந்தக் கிளர்ச்சி சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்காக நிறுத்திவைக்கப்பட்டது.

சென்னை எழும்பூரில் உள்ள ஏரிக்கரையில், 1927இல் காங்கிரஸ் மகாசபை டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்தது. இப்போது அந்த இடத்தில் ஏரியே இல்லை. ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அப்போது நேருஜி சென்னைக்கு வந்தார். காங்கிரஸ் வாரத்தில் நேரு தலைமையில் ''இந்திய குடியரசு காங்கிரஸ்'' என்ற பெயரில் ஒரு மாநாட்டை காமராஜ் நடத்தினார். நீல் சிலையை அகற்ற வேண்டும் என்ற தீர்மானம் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

1937இல் ஒருநாள் சிலை இரவோடு இரவாக அகற்றப்பட்டு மியூசியத்திற்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டது. சிலையை எப்படி அப்புறப்படுத்தலாம் என்று பார்லிமெண்டில் கேள்வி எழுப்பப்பட்டது. ''எங்கள் சிலை ; அதை எந்த இடத்திலும் வைப்போம்'' என்று கூறிச் சென்னையின் பிரதம மந்திரியான ராஜாஜி கன்னத்தில் அறைந்தாற் போல் பதிலளித்தார். நீல் சிலை விவகாரத்துக்கு முற்றுப்புள்ளியும் வைக்கப்பட்டது.

*''தனுஷ்கோடி! இந்தா கொடி; நட பின்னால்...''*

1928இல் சர் ஜான் சைமனின் தலைமையில் ஒரு கமிஷன் இந்தியா வந்தது. எல்லா அரசியல் கட்சிகளும் அதைப் பகிஷ்கரித்து ஹர்த்தால் நடத்தின. கமிஷன் போகுமிடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டி, ''சைமனே திரும்பிப் போ'' என்ற கோஷம் நாடெங்கும் வானைப் பிளந்தது!

பலாத்காரத்தையும், பயங்கரமான அடக்குமுறையையும் அரசாங்கம் கையாண்டது. இருந்தாலும் பகிஷ்காரம் வெற்றிகரமாகவே நடந்தது. இந்த அடக்குமுறையால் நேருஜி தாக்கப்பட்டார்.64வயதான பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் அடிபட்டுச் சில நாளில் காலமானார்.அதே சைமன் கமிஷன் மதுரை வந்தது. அன்று அதற்கு வரவேற்புக் கொடுக்கச் சில ''அரசாங்கச் செல்லக் குழந்தைகள்'' திருமலை நாயக்கர் மகாலில் கூடினார்கள். தேச பக்தியில் சிறந்த மதுரை மக்கள் கொதித்து எழுந்தனர்.கையில் கறுப்புக் கொடியுடன் ''சைமனே திரும்பிப் போ'' என்ற கோஷம் முழங்க, ஆயிரமா யிரமாம் மக்கள் மஹாலை நோக்கிப் படையெடுத்தனர்.

அடக்குமுறையில் பெயர் பெற்ற அதிகார வர்க்கம் மக்களை மஹாலின் வாசல் பக்கம் நெருங்க விடவில்லை. நூறு அடிக்கு அப்பாலேயே நிறுத்திவிட்டார்கள். மக்களின் துடிப்பும், பொலிஸின் அடக்குமுறையும் மோத நேரிடுமோ என ஒவ்வொரு வினாடியும் கடந்து கொண்டிருந்தது.

அப்போது, மூவர்ணக் கொடி பட்டொளி வீசி பறக்கக் காரொன்று கூட்டத்தை நோக்கி வந்தது. அதிலிருந்து தொண்டர் தலைவர் காமராஜ் இறங்கினார். அவ்வரைத் தொடர்ந்து பிரபல காங்கிரஸ் தலைவர் ஜார்ஜ் ஜோசப் இறங்கினார்.தலைவர்களைக் கண்ட கூட்டத்தினருக்கு ஒரு தெம்பு ஏற்பட்டது. வந்த இரு தலைவர்களும் நிலைமையைப் புரிந்துகொண்டார்கள். அதே இடத்தில் தொண்டர் படையைத் தயார் செய்தார்கள். நான் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தேன்.

''தனுஷ்கோடி, இங்கே வா'' என்று தலைவர் காமராஜ் கூப்பிட்டார். நெருங்கிச் சென்ற என்னிடம் ஒரு கொடியைக் கொடுத்து, ''பின்னால் வா''என்று கட்டளையிட்டார்.

காமராஜும் ஜார்ஜ் ஜோசப்பும் தலைமை வகித்து முன்னால் நடக்கத் தொண்டர்களாகிய நாங்கள் கோஷமிட்டு வீறுநடை போட்டபடி இரு வரிசையாகப் பின் தொடர்தோம்.

அந்த இடத்தில் நிற்கக் கூடாது என்பது அதிகார வர்க்கத்தின் உத்தரவு. நாங்கள் நிற்காமல் போகவும் வரவுமாக இருந்தோம். முன்னால் எங்கள் தலைவர்கள் இருந்ததால் பொலிஸ் தடியால் அடி வாங்கவும் நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால், எங்களுக்கு அடி கிடைக்கவில்லை. எங்கள் சிங்கநடையைக் கண்ட பொலிஸ் அதிகாரிகளின் முகத்தில் ஈ ஆடவில்லை. அப்படியே சுருங்கிவிட்டது. சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் எனக்கும் சந்தர்ப்பம் அளித்த காமராஜுக்கு நன்றி செலுத்த நான் தவறுவதேயில்லை.

1929ஆம் ஆண்டு மே மாதத்தில், இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியுற்றது. தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. இதனால், இங்கிலாந்தில் ஒன்றும் பரபரப்பு ஏற்படவில்லை.அந்த நேரத்தில் இந்தியச் சிறைச்சாலைகளில் இந்திய அரசியல் கைதிகள் நடத்தப்படும் முறையைக் கண்டித்து ஜதீந்திரநாத் தாஸ் ஆகஸ்டில் உண்ணா விரதத்தைத் தொடங்கினார். உண்ணா விரதம் இருந்த அவர் அங்குலம் அங்குலமாக உயிரைத் தியாகம் செய்து 63வது நாளில் காலமானார். ஜதீந்திரநாத் தாஸின் உயிர்த் தியாகம் நாட்டையே உலுக்கியது. தேசத்திற்காக எந்தத் தியாகத்தையும் இளைஞர்கள் செய்யத் தயார் என்பதை இது எடுத்துக் காட்டியது.

(தொடரும்)

## அரசாங்கத்தின் ஊழல் மோசடி அறிக்கை மஹிந்தவின் செயலாளரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின்பல்வேறு துறையில் நடந்துள்ள ஊழல் மோசடிகள் குறித்த அறிக்கை மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித்வீரதுங்கவிடம்கையளிக்கப்பட்டுள்ளது.

தர்மயாதனயாவின் எல்லாவல குணவன்ச இந்த அறிக்கையை லலித் வீரதுங்கவிடம் நேற்றுமுன்தினம் கையளித்தார்.

அரசாங்கத்தின் தொடரூந்து சேவைகள், நகர அபிவிருத்திச் சபை, உள்நாட்டு வருவாய் திணைக்களம், சுங்கம், இலங்கை வங்கியின் தென்கொரியா ஊழல் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லேக்ஹவுஸ், வாகனப் பதிவகம், மில்கோ மற்றும் துறைமுகசபை ஆகியவற்றில் நடைபெற்ற ஊழல்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

ஊழல் தொடர்பான அறிக்கையைப் பெற்றுக்கொண்ட லலித் வீரதுங்க பாதுகாப்பு தரப்பில் உள்ள ஊழல்களை உடனடியாக ஒழிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பாதுகாப்புத் தரப்பில் பெருந்தொகையான பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் முறைகேடுகள் நடந்துள்ளன . பாதுகாப்புக்காக 90 பில்லியன் ரூபா செலவிடும் போது அது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றும் லலித் வீரதுங்க கூறினார்.

போலி விசா மூலம் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பிய வழக்கில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இராணுவத்துக்கான கொள்வனவில் நடந்த முறைகேடுகள் தொடர்பான இரு விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் மோடிசகள் குறித்து ஆராய்வதற்காக ஜே.வி.பி. சார்பில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த)

## ஸ்ரீ.சு.க.வின் மத்திய குழுக்கூட்டம் —அடுத்த வாரம் இடம்பெறும்—

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பற்றிய இறுதி முடிவு எடுப்பதற்காக அக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் உட்பட 3 சிறப்புக் கூட்டங்கள் எதிர்வரும் புதன்கிழமையும், வியாழக்கிழமையும் அலரி மாளி கையில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தவிசாளர் பதவியைப் பற்றிய தீர்மானம் எடுப்பதற்காக கட்சி யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வருவது பற்றியும் அந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்த விடயங்கள் பற்றி ஆராய்வதற்காக கடச்சியின் மத்திய குழு, அகில இலங்கை செயற்குழு மற்றும் நிறைவேற்றுச் சபை என்பன அடுத்த வாரம் கூடவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை இரவு அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.கட்சியின் மத்தியகுழுக் கூட்டமும் செயற்குழுக்கூட்டமும் வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைமை மற்றும் கட்சி யாப்புத் திருத்தம் தொடர்பாக மத்திய குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பற்றி செயற்குழு மற்றும் நிறைவேற்றுக் குழு விவாதித்து முடிவெடுக்கும். (த)

## வதந்திகளை நம்பவேண்டாம் ! பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்த வேண்டுமானால் அதற்கு பொது மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கெண்டு பெருமளவு பணத்தை வழங்கும் நபர் யாராயிருப்பினும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அவர்களோடுஎந்தவொரு வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுள்ளார்.

வீடுகள் மற்றும் வாகனங்களை விற்றல், வாடகைக்கு விடுதல் சம்பந்தமாகவும் தீவிர எச்சரிக்கை கண்பிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வதந்திகளை கேட்டு ஏமாற வேண்டாம் என்றும் சந்தேகத்திற்கு இடமான மக்கள் நடமாடினால் 119 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (த-9)


அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின்
வருடாந்த மஹோற்சவத்தை
முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும்
*''நயினை நாகபூசணி அம்மன் பாமாலை''*
வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும்
உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மீண்டும் அதிபராக விரும்புகிறார் முஷாரப்

வாழ்வின் கடைசி நாள் வரை இரா ணுவ வீரனாகவே இருப்பேன் இராணுவ உடை எனது இர்ண்டாவது தோல் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறினார். பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் அல் அரேபியா டிவி சேனலுக்கு கடந்த புதன்கிழமை பேட்டியளித்தார். இவரது பதவிக்காலம் விரைவில் முடியவுள்ள நிலையில் மீண்டும் அதிபராக விரும்பம் கொண்டுள்ளார் என்பதை பேட்டி மறை முகமாக உணர்த்தியது.

இராணுவ தளபதி பொறுப்பில் இருந்து விலகும் எண்ணம் உள்ளதா என்று கேள்விக்கு பதிலளித்த முஷாரப் எனது வாழ்வின் கடைசி நாள்வரை இராணுவ வீரனாகவே இருக்க விரும்புகிறேன். இராணு உடையை மிகவும் நேசிக்கின்றேன் அது என்னுடைய இரண்டாவது தோல் வாழ்வின் அங்கம் என்று பதிலளித்தார்.

பாக். பொதுச் தேர்தல் குறித்து கேட்டதற்கு அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்த திட்டம் உள்ளது. இந்த தேர்தலில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களான பெனாசிர் பூட்டோ, நவாஸ் ஷெரீப் ஆகியோர் கலந்து கொள்ள அனுமதி கிடையாது என்று ஆவேசமாக பதிலளித்தார்.பாக் தேர்தல் ஆணையம் சுதந்திரமாக செயல் படுகிறது. ஆகவே பாராளுமன்றத் தேர்தல் சுதந்திரமாகவும் நெறிமுறைகளுக்கு உட்பட்டும் சிறப்பாக நடத்தப்படும்.

தேர்தல் ஆணையம் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் இராணுவ உதவி வழங்க தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்தார். முஷாரப்பின் அதிபர் பதவிக்காலம் விரைவில் முடியவுள்ளது. எனவே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக தற்போது உள்ள மக்கள் பிரதிநிதிகளின் உதவியுடன் மீண்டும் அதிபர் பதவியை கைப்பற்றும் முயற்சியில் முஷாரப் இறங்கியுள்ளதாக, பாக்.அரசியல் வட்டாரத்தில் கருத்து நிலவுகிறது. (தி)




ஒரு நாள் பயணமாக ஹங்கேரி வந்த அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் தம்பதி, புடாபெஸ்டில் உள்ள சந்தோர் அரண்மனையில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புத்தகத்தில் எழுதுகிறார்கள்



தாய்லாந்தில் பாங்காக்கிற்கு வடக்கே அயுதயா பகுதியில் ராஜபாட் அயுதயா பல்கலைக்கழக மாணவர்களுக்கும் யானைகளுக்குமிடையே கால்பந்து போட்டி நடந்தது

அபூர்வ அரேபிய மான் வேட்டை

# சல்மான் மீது மேலும் ஒரு வழக்கு

## ஐஸ்வர்யாராயும் சிக்கினார்

அகமதாபாத், ஜூன் 23-

அபூர்வ ரக அரேபிய மான்களை வேட்டையாடியதாக சல்மான் கான் மீது இன்னொரு வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஐஸ்வர்யா ராயும் சிக்கி உள்ளார்.

இந்தி நடிகர் சல்மான்கான் மீது தொடரப்பட்ட மான் வேட்டை வழக்கில் 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு கூறப்பட்டது. இந்த நிலையில் இதே போல மான்வேட்டையாடியதாக ராஜஸ்தான் நீதிமன்றத்தில் சல்மான்கான், நடிகை தபு உள்பட 5 பேர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இப்போது புதிதாக ஒரு வழக்கு சல்மான் கான் மீது தூசு தட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் கட்ச் பகுதியில் 1998ம் ஆண்டு ஒரு படப்பிடிப்புக்கு சல்மான்கான், ஐஸ்வர்யா ராய் ஆகியோர் சென்றனர். அப்போது அபூர்வ ரக 2 அரேபிய மான்களை வேட்டையாடியதாக சல்மான் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவர்களுக்கு உள்ளூர் ராணுவ அதிகாரி மற்றும் சில முக்கிய பிரமுகர்கள் துணை போனதாகவும் கூறப்பட்டது. இது தொடர்பாக சல்மான் கான் மற்றும் ஐஸ்வர்யாராய் நேரில் ஆஜராகும்படி குஜராத் வன இலாகா நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் அவர்கள் வரவில்லை. ஷூட்டிங்கில் பிசியாக இருப்பதால் காலஅவகாசம் தரும்படி கேட்டனர். அந்த சமயத்தில் இந்த விவகாரம் பெரிதாக பேசப்பட்டது. ஆனால் ஆதாரம் இல்லை என்று கூறி புகாரை கிடப்பில் போட்டு விட்டனர்.

இந்த நிலையில் வனவிலங்கு பாதுகாவலர்கள் சிலர் குஜராத் விவகாரத்தை இப்போது கையில் எடுத்துள்ளனர். எனவே 8 ஆண்டுகளுக்குப் பிறகு அரேபிய மான் வேட்டை புகாரை சி.ஐ.டி. விசாரணைக்கு குஜராத் அரசு ஒப்படைத்துள்ளது. ஜாலா என்ற சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் இந்த வழக்கை இப்போது விசாரித்து வருகிறார். இதனால் சல்மான் கான், ஐஸ்வர்யா ராய்க்கு புது சிக்கல் எழுந்துள்ளது.

# இந்தியப் பிரதமர் -அமெ.ஜனாதிபதி அடுத்த மாதம் சந்தித்துப் பேச்சு

ரஷ்யாவில் பிரதமர் மன்மோகன் சிங்கை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சந்தித்துப் பேசவுள்ளார். அடுத்த மாத மத் தியில் ரஷ்யாவில் தொழில் வளம் மிக்க 8 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. அமெரிக்கா ரஷ்யா இங்கிலாந்து, பிரான்ஸ் ஜேர்மனி, சீனா, இந்திய ஆகிய நாடுகள் கலந்துகொள்ளவுள்ள இம்மாநாட்டில் இந்த 8 நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கிறார்கள்.

ரஷ்யாவில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் நகரில் நடைபெறும் இம்மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் கலந்து கொள்கிறார்கள். அப்போது இவர்கள் இருவரும் சந்தித்து இருநாட்டு உறவுகள், சர்வதேச பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் அமெரிக்காவில் அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே அணுசக்தி தொடர்பாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது. பெரிதும் சர்ச்சைக்குள்ளான இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் எழுந்தன.


இதனையடுத்து அமெரிக்க ஜனாதீ பதி ஜோர்ஜ் புஷ் கடந்த மார்ச் மாதம் இந்தியா சென்றார். அப்போது அவர் இந்திய தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். அதன் பிறகு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அணுசக்தி ஒப்பந்தத்தில் இரு நாட்டு தலைவர்களும் கையெழுத்திட்டனர். அணுசக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு பயன்படுத்துவது என்று இந்த ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்கு பிறகு இப்போது மீண்டும் இந்த இரு தலைவர்களும் ரஷயாவில் சந்தித்து பேசவுள்ளனர் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் நிக்கோலஸ் பர்ன்ஸ் தெரிவித்தார்.

இவ்விரு தலைவர்களின் சந்திப்பு நல்ல சந்திப்பாக அமையும். இரு நாட்டு விஷயங்கள் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இவர்கள் பேசுவார்கள் எனத் தெரிகிறது. என்றாலும் இது குறித்து முழு விவரங்கள் இன்னும் முடிவாகவில்லை என்றும் அவர் கூறினார். புஷ்சின் ரஷ்ய பயணம் குறித்து அமெரிக்க பாராளுமன்றத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுடனான அணு ஒப்பந்தத் திற்கு ஏற்கனவே பல நாடுகள் ஆதரவு அளித்துள்ளன. மேலும் பல நாடுகளின் ஆதரவையும் அமெரிக்கா இந்த உச்சி மாநாட்டின் போது கேட்கும் என்றும் அவர் கூறினார். (தி)

# WORLD NEWS உலக தரிசனம்




ஜேர்மன் நாஜி படைகள் சோவியத் யூனியனை தாக்கிய 65 வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி, மாஸ்கோவில் கிரெம்ளின் சுவற்றுக்கு வெளியே உள்ள ஒரு போர்வீரர் கல்லறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது

# பேசும் தலையணை

யப்பான் ஆராய்ச்சியாளர்கள் பேசும் தலையணையைத் தயாரித்துள்ளனர். இந்த தலையணையில் சென்சர்கள் பொருத்தப்பட்டுள்ளன. தலையணையில் படுப்பவரின் அசைவுகளை அந்த சென்சர்கள் பதிவு செய்யும். இதன் அடிப்படையில் 40 வகையான ஆலோசனைகளை தூங்குபவருக்கு தலையணை வழுங்குகிறது.

இதற்காக தலையணையுடன் சிறிய திரை இணைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஒருவர் பல நாட்களாக சரியாகத் தூங்கவில்லை என்றால் நல்ல குளியல் போட்டு விட்டு வந்து தூங்கிப்பாருங்களேன் என்று தலையணை ஆலோசனை கூறும்.

நன்றாகத் தூங்குபவர்களை சபாஷ் நன்றாகத் தூங்கினீர்கள் இந்த நடைமுறையையே தொடருங்கள் என்று பாராட்டும். (5)

ஆபத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். ஆபத்தைச் சமாளிக்க வழி என்ன என்று முடிபு கண்டு நிவாத்திக்க முயற்சி செய்யுங்கள்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# சண்டையா? சமாதானமா? இரண்டும் கெட்ட நிலையில் நாடு

சண்டையும் இல்லை. சமாதானமும் இல்லை. இந்த இரண்டும் கெட்ட சூழ்நிலையில் வாழ்வதென்பது மிகவும் கடினமான காரியமே.

இலங்கையில் இருக்கக் கூடிய பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. அதில் ஒன்று சண்டை. மற்றையது சமாதானம்.

இதில் சண்டையா? சமாதானமா? என்பதை தீர்மானிப்பது யார் என்பதே இப்போதுள்ள பிரச்சினை. மக்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கு ஓர் முடிபு கிடைத்தாக வேண்டும்.

அதிலும் அந்த முடிபு மிக விரைவாகக் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். முடிபு கிடைத்தாக வேண்டும் என மக்கள் விரும்புவார்களாயின் அது எந்த வழி என்ற அடுத்த கேள்வி எழுகின்றது.

அங்குதான் பொதுமக்களின் பொறுப்புடன் கூடிய பதிலை காணமுடியும். அதாவது கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் சண்டை நடைபெற்று வந்துள்ளது.

அதேபோல் சமாதான முன்னெடுப்புக்களும் இடையிடையே இடம்பெற்றுள்ளன. இதில் சமாதான வழியில் தீர்வுத் திட்டத்தை அடைவதற்காக பல்வேறு பாதைகள், வழிமுறைகள் ஊடாக பயணித்த போதிலும் குறித்த இலக்கை யாராலும் அடைய முடியாது போயுள்ளது.

அதேநேரம் சமாதான காலத்திலும் மனித உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருப்பது கண்கூடு. இந்நிலையிலேயே மக்கள் வெறுப்படைந்து சண்டையாயின் சரி சமாதான வழியாயினும் சரி ஏதோவொரு முடிந்த முடிபை கண்டாக வேண்டும் என்ற இறுக்கமான நிலைக்கு வந்துவிட்டனர்.

இதில் சண்டை மூலமாக பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்படக் கூடிய அழிவுகள் ஏராளம் என்பது தெரிந்த விடயமே.

ஆயினும், சமாதான சூழ்நிலையில் இடம்பெறும் மனித உயிரிழப்புக்களை விட சண்டை மூலம் மனித உயிர்கள் இழக்கப்படுவதை மக்கள் சகித்துக் கொள்ளத் தயாராகவிருக்கின்றனர்.

எனவே மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டின் தற்போது நடைமுறையில் இருக்கக் கூடிய சூழ்நிலையில் வாழத் தயாரில்லை.

இது சண்டையும் சமாதானமும் அற்ற சூனியச் சூழல்-இச் சூழலில் வாழ்வது பாதுகாப்பானதா? பாதுகாப்பற்றதா? என்பதைக் கூடத் தீர்மானிக்க முடியாத நிலையில் நிம்மதியாக வாழ்வது எப்படி?

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு எந்தவழியிலாயினும் கிடைத்தாக வேண்டியது பொதுமக்களின் தற்போதைய நிலை.

# சின்னாளப்பட்டியிலிருந்து இலங்கை வந்த புடவை வியாபாரிகளின் நிலை என்ன ?

(கொழும்பு)

சின்னாளப்பட்டியிலிருந்து இலங்கைக்கு வந்த வியாபாரிகள் காணாமல் போன சம்பவத்தில் மர்மம் நீடிக்கிறது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியிலிருந்து ஏராளமானோர் புடவை வியாபாரத்திற்காக இலங்கைக்கு வந்த நிலையில் இவர்களில் விஜயகுமார் என்ற இளம் குடும்பஸ்தர் இலங்கையில் மர்ம நபர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முருகேசன், ராதாகிருஷ்ணன் ஆகிய இருவர் காணாமல் போயினர் எனக் கூறப்படுகிறது. இச் சம்ப வங்கள் இடம்பெற்று பல நாட்களாகியும் இதுகுறித்த சரி யான தகவல் எதுவும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று இருவரது குடும்பத்தினரும் கூறுகின்றனர். பல்வேறு முயற்சிகள் செய்தும் பலனில்லை .தமிழக அமைச்சர் ஐ.பெரியசாமி, மாவட்ட கலெக்டர் எஸ்.பி.ஆகியோரிடம் மனு கொடுத்துள்ளோம் என்கின்றனர்.

இந்நிலையில் விசா நீடிப்பு செய்யாதவர்களில் பலர் இலங்கை பொலிஸாரின் சோதனையில் சிறையிலுள்ளனர் என்றும், சம்பவ இடம் இலங்கை என்பதாலும் தூதரகங்கள் மூலம் மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாலும் மாவட்ட நிர்வாகம் இவ் விடயத்தில் விரைவாக செய்யப்பட இயலவில்லை என தமிழகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.தற்போது இலங்கையில் போர் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையில் தங்கியுள்ள சின்னாளப் பட்டி வியாபாரிகள் நிலை குறித்து உறவினர்கள் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

இதேசமயம் சின்னாளப்பட்டியை சேர்ந்தவர்கள் இலங்கைக்கு எத்தனை பேர் சென்றுள்ளனர்.எத்தனை பேர் திரும்பி வந்துள்ளனர் என்று கணக்கெடுப்பது தற்போது சாத்தியமற்றதாக உள்ளது எனவும்

இதனால் தமிழக அரசிற்கு சரியான தகவல் கிடைப்பதில் சிக்கல் எழுந்துள்ளது என்றும் தமிழக அரச தரப்பு உயர் அதிகாரிகள் கூறுகின்றனர். சின்னாளப்பட்டியிலிருந்து இலங்கை, தென்ஆபிரிக்கா உள்ளிட்ட பலநாடுகளுக்கு ஏராளமானோர் சென்று வருகின்றனர்.

இதனை முறைப்படுத்தவும் இவ்வாறு வெளிநாடு செல்வோர் குறித்து முழுமையான தகவல்களை பதிவுசெய்யும் நடைமுறையை ஏற்படுத்தவும் தற்போது தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (க-9)

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் யூலை 12இல் பூர்த்தியாகுமாம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணிகள் எதிர்வரும் யூலை 12ஆம் திகதி பூர்த்தியாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் 3 கட்டங்களாக நடைபெறுகின்றன. தற்போது இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொ[illegible]ளப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெ[illegible]வித்துள்ளார்.

இம்முறை 8ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விடைத்தாள்களை மதிப்பிடுகின்றார்கள் என்றும் சர்ச்சைக்குரிய ஒ.எம். ஆர் ஸ்கானர் இயந்திரம் இதன்போது பயன்படுத்தப்படவில்லை என்றும் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (க-9)

## நெற்செய்கையை மேற்கொள்ள படையினர் அனுமதிக்கவேண்டும்!

### மறவன்புலோ, தனங்கிளப்பு மக்கள் வேண்டுகோள்

(தனங்கிளப்பு)

படையினரால் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ள மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதிக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

தென்மராட்சியில் 2000 ஆம் ஆண்டு இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களையடுத்து அப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளை ஆக்கிரமித்த படையினர் அப் பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயமாக்கினர்.

இதனால் 6 வருடங்களாக அப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

விவசாயத்தை நம்பி வாழும் அப்பகுதி மக்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதிகளில் வாழும் மீனவர் குடும்பங்களும் தமது சொந்தப் பிரதேசங்களில் தொழில் செய்ய படையினர் அனுமதிக்க வேண்டும் எனக் கோருகின்றனர். (க-37)

## இலங்கை நாடாளுமன்றத்துக்கான தமிழர் பிரதிநிதித்துவத்தை குறையுங்கள்!

### ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கான தமிழர் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து சிங்களவர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் அத்துரலிய ரத்ன நேற்று முன்தினம் உரையாற்றுகையில்,

நாட்டின் சட்டப்படி வடபகுதிக்கு 10 நாடாளுமன்ற ஆசனங்களே ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் 15 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையைக் குறைத்து இதர பகுதிகளினது எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 6இலட்சத்து44ஆயிரத்து 279வாக்காளர்கள் இருப்பதாக தேர்தல் திணைக்களம் கூறுகிறது. இந்த வாக்காளர்களுக்கு 9 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வன்னிமாவட்டத்தில் 2இலட்சத்து 26 ஆயிரத்து 604 வாக்காளர்களுக்கு 6ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பகுதியில் ஒரு இலட்சத்து 50ஆயிரம் பேர் உள்ளனர். உண்மையில் யாழ்ப்பாணத்தில் மொத்த மக்கள் தொகையே 3 இலட்சம் தான். தேர்தல் திணைக்களத்தின் புள்ளி விபரம் தவறானது. பல தமிழர்கள் இறந்துவிட்டனர். இடம்பெயர்ந்துவிட்டனர். வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இவற்றைக் கணக்கில் கொண்டு வடபகுதிக்கு மொத்தம் 6 ஆசனங்கள் தான் ஒதுக்க வேண்டும் என்றார். (க)

## நயினாதீவுக்கான படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு இறங்குதுறைக்கும் புங்குடுதீவு குறிகட்டுவான் இறங்குதுறைக்குமிடையில் நடத்தப்படும் படகுசேவையில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு மணிக்கான படகுசேவையை நயினாதீவு செல்லும் யாத்திரிகர்கள் நலன்கருதி மீண்டும்ஆரம்பிக்க நயினாதீவு படகு உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. மேற்குறிப்பிட்ட படகுசேவை இடைநிறுத்தப்பட்டதால் நயினாதீவு அம்பாள் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் ஆலய பூசைகளில் முழுமையாக கலந்துகொள்ள முடியாமல் பிற்பகல் 1.00 மணிக்கு நயினாதீவு இறங்குதுறையிலிருந்து புறப்படும் படகிலேயே தமது பயணத்தை தொடரவேண்டியுள்ளது.

இதனைத் தவிர்க்குமுகமாக மீண்டும் இரண்டுமணிக்கு படகு சேவை கடந்த புதன்கிழமை முதல் வழமைபோல் நடைபெற்று வருகின்றது என மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நயினாதீவு அருள்மிகு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் குறிகட்டுவான் இறங்குதுறைக்கும் நயினாதீவு இறங்குதுறைக்குமிடையில் மேலதிக படகு சேவைகள் நடத்தப்படும் என்றும் 12வயதிற்குட்பட்டவர்களுக்கு உயிர் காப்பு அங்கி கட்டாயமாக அணிவிக்க வேண்டும் என்றும் அண்மையில் ஆலயமண்டபத்தில் வேலணை பிரதேச செயலர் மு. நந்தகோபால் தலைமையில் இடம்பெற்ற உற்சவம் தொடர்பான கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மற்றும் அடியார்களின் தரை போக்குவரத்து வசதி, சுகாதார வசதிகள், தொண்டர் சேவைகள், குடி நீர்வசதிகள் பற்றியும் மேற்படி கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

## இலங்கை பத்திரிகை சபையை மீண்டும் செயற்படுத்த அரசுமுடிவு


இலங்கையின் பத்திரிகை சபையை மீண்டும் செயற்படுத்த அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்று முன்தினம் பேசிய அனுர பிரியதர்சன யாப்பா, பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணையத்துக்கு இணையாக இந்த சபை இயங்கும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டு பத்திரிகை சபை கலைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணையத்தின் அலுவலகத்தில் ஊடக அமைப்புக்களின் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அனுர பிரிய தர்சன யாப்ப இவ்வாறு கூறினார். இக் கூட்டத்தில் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர்கள் சங்கம், தமிழ் ஊடகப் பேரவை, முஸ்லிம் ஊடகப் பேரவை மற்றும் மத்திய சேவ விருத்ய சமிதி சம்மேளனம் ஆகியவை கலந்துகொண்டன. இதனிடையே அரசின் இந்த முடிவுக்கு மேற்படி 5ஊடக அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி மஹிந்தவுக்கு கடிதம் அனுப்பியுள்ளன (க)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



'நான' 'எனது' என்று சொல்லாத மனிதர் உலகில் இல்லை. இந்த எண்ணமே உலகின் எல்லாச் செயல்களுக்கு அடிப்படை யில் காணப்படுகிறது.

# சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் அடித்து சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சாட்டியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் அத்துமீறி நுழைந்த கடற்படையினர் அங்கிருந்த மின்குமிழ்களை அடித்து நொருக்கியதுடன் செயலகக் கட்டடத்திற்கும் சேதம் விளைவித்தாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் அமைந்துள்ள துயிலும் இல்லங்கள்மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் தம் பணியை சமூகக் கடமையாகக் கருத வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் தங்களது பணிகளை தொழில் வாய்ப்பாக மட்டும் கருதி செயற்படாமல் அதை ஒரு சமூகக் கடமையாகவும் கருதி சேவையாற்ற வேண்டும் என ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சி சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் உடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகின்ற அமைச்சர் யாழ்.மாவட்டத்தின் பலதரப்பட்ட அரச பணியாளர்களுக்கான சந்திப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றார்.

இதில் ஒரு கட்டமாக கடந்த 21 ஆம் திகதி மேற்படி சமுர்த்தி உத்தியோகஸ்தர்களை யாழ்.அலுவலகத்தில் வைத்துச் சந்தித்து அவர்களுடன் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

மேற்படி சந்திபின்போது பிரதேச சமுர்த்தி உதவியாணையாளர்கள் உட்பட சமுர்த்தி வங்கி மற்றும் 'சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்து கொண்டனர். (ச-5)

# குடும்பஸ்தரைக் காணவில்லை

சுன்னாகத்திலிருந்து அரியாலையிலுள்ள உறவினர் வீட்டிற்கு செல்வதாகக் கூறிச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.சுன்னாகம் சென்.அன்ரனிஸ் வீதியைச் சேர்ந்த அல்பிரட் அன்ரனி சேவியர் (வயது-35) என்பவரே காணாமல் போனதாக அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.இவர் கடந்த 21 ஆம் திகதி சுன்னாகத்திலி ருந்து அரியாலையிலுள்ள உறவினர் வீட்டிற்குச் செல்வதாக கூறிச் சென்றார் என்றும் அதன்பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவ் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-15)

# ஸ்ரீ.சு.கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்கு சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கும் விதமாக திருத்தம் செய்யப்பட்டுள்ள கட்சி யாப்பினை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் இந்த செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவினால் கையெழுத்திடப்பட்ட அழைப்பிதழ் கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழை தொலைநகல் மூலம் சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ளதாக அவரது அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தலைமைப் பதவி தொடர்பில் சந்திரிகாவுக்கும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த காலங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# இராணுவம்மீது தாக்குதல்

நெல்லயடி பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்மீது நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.இதன்போது எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து அப்பகுதியில் பயணித்தோர் தீவிர சோதனைக்கு உட்படுத் தப்பட்டனர். இதேவேளை வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனந்தெரியாத சிலர் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர். (ச-15,10)

# வங்காலைப் படுகொலை விசாரணைகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் துன்புறுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான மரண விசாரணையில் வங்காலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் வங்காலை பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோரை வரும் ஜூலை 7 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில் இந்த மரண விசாரணை நேற்று நடைபெற்றது. வங்காலை தோமஸ்புரி வீட்டுத்திட்டத்திலுள்ள தமது வீட்டில் இருந்தவேளை மூர்த்தி மார்ட்டின் மற்றும் அவரின் மனைவி குழந்தைகள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை சம்பந்தமாக இறந்த பெண்ணின் சகோதரி நீதிமன்றில் நேற்று சாட்சியமளித்தார். நீதிமன்றில் ஆஜராகிய வங்காலை குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரியிடம் இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதாக குறிப்பிட்டார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் இப்படியான வழக்கு விசாரணைகளில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ச-5)

# குண்டுப் புரளி

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் குண்டு வைக்கப்பட்டதாக நேற்று வெளியான தகவலினை அடுத்து ஏற்பட்ட பதற்றம் தற்போது தணிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்தே இந்தப் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பல்கலைக்கழக வளாகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தொலைபேசி செய்தியையடுத்து மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

அத்துடன் குண்டு செயலிழக்கும் பிரிவினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் இதன்போது எந்தவிதமான சந்தேகமான பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-9)

# ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்கில் அதிகரித்துள்ள வன்முறை நடவடிக்கையால் மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வருவதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பி.பி.ஸி. செய்தி சேவைக்குச் செவ்வி வழங்கியிருக்கும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் றோலண்ட் பெ ஞ்சமின், டிசம்பர் மாதத்தில் உருவெடுத்த வன்முறைச் சூழல் கடந்த இரு வார காலத்தில் மேலோங்கியிருப்பதாகக் கவலை வெளியிட்டுள்ளார்.

மிகவும் மோசமான கட்டத்தை நோக்கி நாடு சென்றுகொண்டிருப்பதைஇது உணர்த்தியிருப்பதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

# கொழும்பில்...

அதிர்வு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வானொலி நிலையங்களும் குண்டு வெடிப்பு நடந்ததாக செய்திகளை ஒலிபரப்பின. இக் குண்டு வெடிப்புப்பீதியினால் செல்லிடப் பேசிகளின் சேவைகளில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது.

இலங்கை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறுகையில் கடல் கண்ணி வெடிக்குண்டு வெடித்ததாக முதலில் சந்தேகிக்கப்பட்டது. அப் பகுதிக்கு உலங்கு வானூர்தி அனுப்பி வைக்கப்பட்டு உண்மை நிலையை தெரிந்து கொண்டோம் என்றார். (ச-5)

# யாழில் இன்று பூரண ஹர்த்தால்...

## பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணத்தில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மாவீரர் துயிலும் இல்லங்கள்மீது அண்மைய நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்தே இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் மற்றும் யாழ்.மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியம் என்பன விடுத்துள்ளன.

மாவீரர்கள் துயிலும் இல்லங்களில் அண்மைக்காலமாக இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டிவருகின்றனர். இராணுவத்தினரின் இத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

1995 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டை படைகள் கைப்பற்றியபோது மரவீரர் துயிலும் இல்லங்களை புல்டோசர் கொண்டு அழித்திருந்தனர்.

இன்று மீண்டும் தமிழ் மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களையும் மாவீரர் நினைவுத்தூபிகளையும் சேதப்படுத்தி அழிப்பதன் ஊடாக தமிழ் மக்களை வம்புக்கு இழுக்கின்றனர் எனத் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்குமில்லாதவாறுஇந்தக் காட்டுமிராண்டித்தனங்களைக் கண்டித்து இன்று யாழ்.குடாநாடு நழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எனவே இன்றையதினம் மக்கள் எவரையும் வெளியே நடமாட வேண்டாம் என்றும் அனைத்து அரச திணைக்களங்கள், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், போக்குவரத்துச் சேவைகள் என்பவற்றை நிறுத்தியும் அனைத்து வர்த்தக நிறுவனங்களைப் பூட்டியும் எமது எதிர்ப்பினை ஆக்கிரமிப்பாளர்களுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

இன்றையதினம் ஏ-9 பாதையூடான யாழ்.குடாநாட்டிற்கான போக்குவரத்தினை முற்றாக நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணிப்புறக்கணிப்பு

இதேவேளை படைகளாலும் அதன் துணைக்குழுக்களாலும் அண்மைக்காலமாக அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் மக்கள்மீதான இராணுவ நெருக்குவாரங்களை நிறுத்தி இயல்பான நடமாட்டத்திற்கும் உயிர் அச்சுறுத்தல் இன்றிய வாழ்விற்கும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறி அரசுக்கு எதிரான பணிப்புறக்கணிப்பானது திங்கள் முதல் மீண்டும் தொடரவுள்ளதாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மாணவர்களின் நலனுக்காக பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் படைத்தரப்பினர் தொடர்ந்தும் கொடூரமான முறையில் குழந்தைகள், சிறுவர், மாணவர், பெண்கள், முதியோர் என்ற வகையில் தொடர்ந்தும் படுகொலைகளைப் புரிந்து வருகின்றனர்.

அத்துடன் தமிழ் மக்களின் மனங்களில் நினைந்து பூசிக்கப்படும் மாவீரர் துயிலும் இல்லங்களை அநாகரியமான முறையில் கோழைத்தனமாகத் தாக்கிச் சேதப்படுத்தியும் அகிம்சையின் முதலிடமான தியாகி திலீபனின் தூபியை சேதப்படுத்தி சிதைப்பதுவும் கைதுகளும் கடத்தல்களும் சுற்றிவளைப்புகளும் தீவிரமடைந்து வருவதாலும் தமிழ் மக்களாகிய எமக்கு தாங்க முடியாத வேதனையும் கட்டுக்கடங்காத சினத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைக் கண்டித்தும் எதிர்ப்புத்தெரிவித்தும் மேற்படி சம்பவங்கள் நிறுத்தப்படும் வரை எதிர்வரும் 26.06.2006 திங்களிலிருந்து தொடர்ச்சியாக பணிப்புறக்கணிப்பினை மேற்கொள்வதாகத் தீர்மானித்துள்ளோம்.

சகல நிறுவனங்களும் அமைப்புகளும் தங்கள் பரிபூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என அவ்வமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (ச-5)

# யாழ்.-மன்னார்...

கடந்த மாதம் 22-ம் நாள் ஆயர்கள் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினர். அதன் பின் நேற்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது தமிழர் தாயகத்தில் இடம் பெற்றுவரும் படுகொலைகள், அமைதி முயற்சிகள், தற்போதைய நிலைவரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்,சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ச-5)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.